

சுஜாதா
செப்டம்பர்
விலை ரூ.5
மாத இதழ்
இரகசிய சிநேகிதனே..!
ஆர்.மணிமாலா

# 1



அழகழகான... விதவிதமான மலர்களை ஒவ்வொரு அறையிலும் சிறைப்படுத்தியிருந்தனர். அடைக்கப்பட்டிருக்கிறோமே என்கிற கவலை கொஞ்சமும் அவர்கள் முகத்தில் இல்லை! உலகையே தங்கள் துப்பட்டாவில் வளைத்து கட்டி விட்ட பெருமிதமும், மகிழ்ச்சியும் பேச்சில் உற்சாகமாக வெளிப்பட்டது. இது ஒரு தனி உலகம். அது... கல்லூரி வளாகம்!

பி.எஸ்.ஸி. மூன்றாம் வருடம் என்று சாக்பீஸால் கதவில் எழுதப்பட்டிருந்த அறையில்... அந்த பூக்களின் நடுவே தாமரைப்பூவாய் தனித்து தெரிந்தாள் காவ்யா! அந்த வகுப்புக்குரிய ஆசிரியை விடுமுறை என்பதால்... இளசுகளின் முகத்தில் இரட்டிப்பு சந்தோஷம்.

காவ்யா தலை குனிந்து தீவிரமாய் எழுதிக்கொண்டிருந்தாள். அவள் எழுதுவதையே கவனித்துக் கொண்டிருந்தாள் ரேகா.

"இமை மீது நித்திரை... இரவு தந்தது!
இதழ் மீது முத்திரை... உறவு தந்தது!
ஒன்று தூக்கமானது.
ஒன்று ஏக்கமானது.
இன்ப ஏக்கம் வந்த பின்பு தூக்கம் நீக்கமானது!
அதுதான் உணர்வு!
அதில் தான் உலகு!"

"எப்படியிருக்கு? படிச்சு பார்த்து சொல்லு!" எழுதிய பேப்பரை ரேகாவிடம் கொடுத்தாள் காவ்யா.

"எப்படி உன்னால இவ்வளவு சூப்பரா கவிதை எழுத வருது?" பிரமிப்பாய் கேட்டாள்.

"எங்கப்பா நல்லா கவிதை எழுதுவார் தெரியுமா?

அவருக்கு சின்ன வயசிலேயே நல்லா படிச்சு தமிழ் பண்டிட்டா வரணும்னு ஆசையிருந்துச்சு. குடும்ப சூழ்நிலை...படிக்க விடலை! காடு, கழனின்னு விவசாயத்துல இறங்கிட்டார். ஆனால், அவரோட வேட்கை தணியலை. ஆசை தலைதூக்கும் போதெல்லாம் கவிதை எழுத உட்கார்ந்துடுவார். இந்த கவிதைக்கூட எங்கப்பா எழுதி வச்சதிலேர்ந்து சுட்டதுதான்."

"அடிப்பாவி... காப்பி அடிக்கிறியா?"

"மத்தவங்க எழுதினதை ஒண்ணும் எடுத்து என்னோடதுன்னு சொல்லலியே! எங்கப்பா எழுதினதை தானே எடுத்தேன்?"

"இருந்தாலும் கற்பனை திருடக்கூடாது. அது கேவலமான செயல்!"



"உன்கிட்டே உண்மைய சொன்னது என் தப்பு! இதை நான் தான் எழுதினேன்னு சொல்லியிருந்தா... என்னை பாராட்டியிருப்பே! அப்படித்தானே?"

"நிஜம்தான்... ஆனா, உண்மைய மறைக்கறது... சூரியனை மேகம் மறைக்கிறமாதிரி! என்றைக்காவது ஒருநாள் வெளிப்பட்டே தீரும்! சரி... இந்த பேச்சை விடுவோம். ரொம்ப போரடிக்குதே! என்ன பண்ணலாம்?"

"பாட புத்தகத்தை எடுத்து வச்சு படிப்போம்!"

"இருக்கிறதிலேயே மகா போர் அதுதானே? வேற நல்ல ஐடியாவா சொல்லு!"

"தாயே...ஆளைவிடும்மா! நான் கிளாஸ் முடியறவரைக்கும் இப்படி அப்படி அசையப் போறதில்லே. எங்கப்பா என்மேலே ரொம்ப நம்பிக்கை வச்சிருக்கார்! காலேஜை கட் அடிச்சிட்டு உன் பொண்ணு ஊர் சுத்தறான்னு யாராவது பார்த்துட்டுப் போய் சொன்னா... அவ்வளவுதான்!"

"ஏன்... அடிப்பாரா?"

"அடிச்சா...சந்தோஷமா ஏத்துக்கலாமே! எங்கப்பா ரொம்ப வித்தியாசமானவர் ரேகா! நாங்க தப்பு செஞ்சா... தண்டனையை தனக்குத் தானே கொடுத்து எங்களை அழவைப்பார். யாரோடையும் பேசமாட்டார். வாரக் கணக்குல சாப்பிட மாட்டார். அப்படியிருக்கப்ப எங்களால் தப்பு பண்ணமுடியுமா சொல்லு?"

"இந்த கிளாஸ்ல காவ்யாங்கறது யாருங்க?"

ஆபீஸ் பியூன் வாசலில் வந்து சத்தமாய் கேட்டதும்... அத்தனை பேரும் பேச்சை நிறுத்தி திருப்பிப் பார்த்தனர்.

காவ்யாவுக்கு வியப்பாய் இருந்தது.

"யெஸ்...நான்தான்...என்ன விஷயம்?"

"வாங்க... உங்களை உடனே வீட்டுக்கு வரச்சொல்லி தகவல் வந்தது!"

"எ...என்னையா... எதுக்கு?" உடம்பெங்கும் பதற்றம் மின்சார அலைப்போல் பரவ... புத்தகங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு வந்தாள்.

"தெரியல... வாங்க!" என்ற பியூனின் முகத்தில் சங்கடம் படர்ந்திருந்தது.

"வீட்லேர்ந்து யார் வந்திருக்காங்க?"

"யாரும் வரலேங்க... போன்தான் வந்தது!"

"போனா? என்ன விஷயம்னு உங்களுக்குத் தெரியாதா?"

"இ... இல்லே... தெரியாது!"

"நோ... உங்களுக்கு தெரிஞ்சிருக்கு. சொல்லுங்க ப்ளீஸ்... இதுவரைக்கும் வீட்லேர்ந்து யாரும் என்னை அழைச்சதில்லே. மனசு பதறுது. என்ன விஷயம்னு தயவு பண்ணி சொல்லுங்க!"

அவள் கெஞ்சவும்… அதற்கு மேல் வாயைமூடிக் கொண்டிருக்க முடியாமல் சொல்லி விட்டான் அந்த மோசமான செய்தியை!

காவ்யாவின் அப்பா மீது லாரி மோதி மிக ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாராம்.

அவ்வளவுதான்!

"அப்பாாா…"என்று அலறிய காவ்யாவை கண்டு கதிகலங்கிப் போனான் பியூன்!

***

அப்பாவை பார்க்க பார்க்க… அழுகை அடிவயிற்றிலிருந்து பீறிட்டு எழ முற்பட்டது. அவ்வளவையும் அம்மா முகம் பார்த்து சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தாள். விபரீதமாய் ஏதும் நிகழ்ந்து விடுமோ என்கிற பயத்தோடு பேயறைந்ததுப் போலிருந்தது புனிதவதியின் முகம். தன் அழுகை அவளின் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் சின்னா பின்னப் படுத்தி விடுமோ என்கிற பயம் காவ்யாவிற்கு.

வெங்கடாசலத்தின் உடம்பில் ஒரு இடம் பாக்கி இல்லாமல் கட்டுப் போடப்பட்டிருந்தது. அறுவடை காலம் என்பதால்… வழக்கத்தை விடவும் அதிகமான நேரத்தை வயலில் செலவழித்தார். அன்று தாமதமாகத்தான் மதிய உணவை சாப்பிட்டிருக்கிறார். நெஞ்சை கரிப்பதுப்போல் இருக்கவே… சற்று தள்ளி உள்ள பெட்டிக்கடையில் வெற்றிலை பாக்கு வாங்க… ரோடை கடக்க முயன்றபோதுதான்… புயலாய் சீறிவந்தது அந்த லாரி. தார்ப்பாலினால் மூடி ஏதோ சரக்கு ஏற்றிச் சென்ற அந்த லாரிதான்… வெங்கடாசலத்தின் மீது மோதி தூக்கியெறிந்து விட்டு நிற்காமல் போய் விட்டது.

ஒரு இடம் பாக்கியில்லாமல் உடம்பில் எலும்பெல்லாம் நொறுங்கி விட்டது. அவரை அள்ளிக் கொண்டுதான் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

மூன்று பெண்பிள்ளைகள். காவ்யாதான் மூத்தவள். அடுத்தவள் வினிதா ப்ளஸ்டு படிக்கிறாள். கடைசிப் பெண் சுபா பத்தாவது படிக்கிறாள். மூன்றும் பெண் பிள்ளைகளாயிற்றே என்று பெற்றவர்கள் ஒரு நாளும் மனம் கலங்கியதில்லை. ஆண் பிள்ளைகளை விட பெண் குழந்தைகள் இயல்பாகவே பெற்றோர் மீது பற்றோடும் பாசத்தோடும் இருப்பார்கள் என்பதால்… முடிந்தவரை அவர்கள் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து சந்தோஷப்படுத்தினார். அப்படிப்பட்ட அழகான குடும்பத்தில் இன்று நில நடுக்கம்!

புனிதவதிக்கு கணவனும் பெண்களும் தான் உலகம். அதைத்தவிர வேறெதுவும் தெரியாத வெகுளிப் பெண்மணி.!

"அவருக்கு ஏதாவதொன்று ஆகிவிட்டால்? என் மூன்று பெண்களின் கதி? ஐயோ…?" நினைத்தபோதே பூமி பிளப்பது போலிருந்தது.



'அப்படி ஏதும் ஆகிவிடாது. கடவுள் ஆக விடமாட்டார். பெருமாளே… என் புருஷனைக் காப்பாற்று! நடந்தே உன் இருப்பிடம் வருகிறேன். என் தலைமுடியை உனக்கு காணிக்கை செலுத்துகிறேன்' வேண்டிக் கொண்டாள்.

ஆனால், டாக்டர்களுக்கு தெள்ளத் தெளிவாய் புரிந்துப்போயிற்று. வெங்கடாசலம் உயிரோடிருக்குப்போவது சிலமணித்துளிகள் என்று!

வெங்கடாசலத்திற்கு விழிப்பு வந்தபோது… குடும்பம் மொத்தமும் கண்ணீரை துடைத்துக் கொண்டு, கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு இவரை சூழ்ந்துக் கொண்டது. ஆனால், வெங்கடாசலத்திற்கும் தன் உடல் நிலை புரிந்தது. மனிதன் தன் கடைசி தருணங்களில் ஞானியாகி விடுகிறான். செய்த தவறுகளுக்கு அவசர அவசரமாய் மன்னிப்பு கேட்கிறான். விரோதிகள் கூட நன்றாயிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறான்.



ஹைக்கூ

கல்லறைப் பூக்களில்
மலர்ந்து கிடக்கிறது
வாழ்க்கை ரகசியம்.

-ஸ்ரீரசா

மூன்று பெண்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் நிறைய இருக்கிறது. செய்யாமல் விட்ட கடமைகள் ஏழேழு ஜென்மத்திற்கும் தொடர்ந்து வரும். கடவுளே என் குழந்தைகளுக்காவது என்னை கொஞ்சகாலம் விட்டு வைக்கக்கூடாதா? சொத்து, சுகம் என்று எதையும் சேர்த்து வைக்கவில்லை. புனிதவதி இவர்களை எப்படி கரை சேர்ப்பாள்? சமையலேக்கூட திருமணத்திற்கு பிறகுதான் கற்றுக் கொண்டாள். அப்படிப்பட்ட அம்மாஞ்சி!

என்ன பண்ணப் போகிறாள்? இவர்களை யார் பொறுப்பில் விட்டுச் செல்லப் போகிறேன்? கண்கள் கலங்கியது.

அவர் அழுவதைப் பார்த்ததும் புனிதவதி விம்ம ஆரம்பித்தாள்.

"என்னங்க…"

"அம்மா… ஷ்… அழாதேம்மா! ஒண்ணும் ஆகாது. அப்பாவுக்கு ஒண்ணும் ஆகாது. பழையபடி குணமாகி வீட்டுக்கு வந்திடுவார். பக்கம் பக்கமாய் கவிதை எழுதுவார். அழாதேம்மா! உன் அழுகை அப்பாவை கலவரப்படுத்திவிடப்போகிறது!" அம்மாவின் தோளை அழுத்தி, தன்

வேதனை வெளிப்படாமல் கவனமாய்... தேர்ந்தெடுத்த வார்த்தைகளால் சொன்ன ஆறுதல்—

'இதோ.. இவளை நம்பி ஒப்படைத்து விட்டுப் போ!' என்று உள்ளிருந்து குரல் ஒலித்தது.

"வாம்மா!" என்று கண்களால் மகளை அருகில் அழைத்தார்.

"என்னப்பா?" அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

"நீ.. நீ.. தா..ன்!"

"சொல்லுங்கப்பா..."நெஞ்சடைத்துக் கொண்டது.

"உ..உ.ன்னை.. நம்பிதான்.. எல்லாரையும் விட்டுட்டுப் போறேன்!" மேல் மூச்சு வாங்கியது.

"அப்பா... உங்களுக்கு ஒண்ணும் ஆகாதுப்பா?" உடைந்துப் போனாள்.

"நீ.. நீதான்.. இனி எல்லாமே!" அவ்வளவுதான். அது தான் அவர் வாயிலிருந்து வந்த கடைசி வார்த்தை! அவர் இயக்கம் முழுக்க நின்றுப் போனது.

அடுத்த கணம் அந்தப் பெண்களின் அழுகுரல் ஆஸ்பத்திரியையே கிடுகிடுக்க வைத்தது.

***

வெங்கடாசலமில்லாத வீடு வெறிச்சென்றிருந்தது. கிட்டத்தட்ட மயங்கியே கிடந்தாள் புனிதவதி. உணர்வு திரும்பி கண் விழிக்கும் போதெல்லாம் வாய்விட்டு அழ ஆரம்பிப்பாள். அவள் அழுவதை பார்த்துப் பெண்களும் அழ ஆரம்பித்தனர். மூலைக்கொன்றாய் கந்தல் துணியாய் சுருண்டு கிடந்தவர்களைப் பார்க்கும் போதெல்லாம் வேதவல்லிக்கு மனசு வலித்தது.

காரியத்திற்கு என்று வந்த கூட்டமெல்லாம் பறந்தோடியிருக்க வேதவல்லியும் அவள் மகன் சங்கரும் மட்டும்தான் தங்கியிருந்து அவர்களை கவனித்துக் கொண்டனர்.

அவள் அந்த குடும்பத்தினர் மீது எடுத்துக் கொண்ட அக்கறைக்கும் காரணம் இல்லாமலில்லை. வேதவல்லி வெங்கடாசலத்தின் உடன் பிறந்த அக்கா. இந்த சீர்காழியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தள்ளியிருந்த பால்வாடி ஊரில்தான் இருக்கிறாள். அவளுடைய ஒரே மகன் சங்கர். அரசாங்க உத்யோகத்தில் இருப்பவன். மாமா இறந்ததற்காக அத்தனை காரியங்களையும் வலியே சுமந்து செய்துக் கொண்டிருப்பவன்.

சங்கர் ஓட்டலுக்குச் சென்று வாங்கி வந்த உணவு பொட்டலங்கள் அடங்கிய பார்சலோடு உள்ளே நுழைந்தான்.

"வாப்பா!" என்றபடி அவற்றை வாங்கிக் கொண்டு புனிதவதியின் அருகில் சென்றமர்ந்தாள் வேதா.

"புனிதா.. எந்திரி.. இதை சாப்பிட்டுக்க!"



"எனக்கு வேண்டாம்!"

"பிடிவாதமாய் அஞ்சுநாளா ஒண்ணுமே சாப்பிடாம கிடக்கிறே! உன்னைப்பார்த்து உன் பொண்ணுங்களும் சாப்பிடாம கிடக்குதுங்க! நீங்க இப்படியிருந்தா என் தம்பியோட ஆத்மா எப்படி சாந்தியடையும்?"

அவள் அப்படி பேசியதும் அமிழ்ந்து கிடந்த கணவனின் நினைவுகள் பீறிட்டு எழ.. குரலெடுத்து அழுதாள் புனிதவதி.

"ப்ச்.. என்ன புனிதா.. இப்படி பண்றே? அழாதே! இனி உனக்கு இந்த பொண்ணுங்கதான் எல்லாமே. உன்னால அதுங்களும் அழுகுது பார்! காவ்யா.. நீயும் கூட சேர்ந்து அழுதா எப்படி? நீ தானே உங்கம்மாவுக்கு ஆறுதல் சொல்லணும்?"

"முடியலே அத்தே.. என்னால முடியலே! எனக்கு எங்கப்பா


விந்தையான துயர் தீர்க்கும் மாந்திரீக மோதிரம் இலவசம்

எமது ஆசிரம மாந்திரீக மோதிரத்தை அணிந்தாலோ உடன் வைத்திருந்தாலோ நீங்கள் காதலில் வெற்றி பெற்று அவர்களால் நேசிக்கப்படுவீர். வியாபாரத்தில் இலாபம், தேர்வில் வெற்றி, கடன் தொல்லையிலிருந்து விடுதலை, வழக்குகளில் வெற்றி, வேலைவாய்ப்பு கிட்டுதல், பதவி உயர்வு சதாரணமானவர்கள் கூட பெரிய மனிதர்களாகலாம். அதாவது தாங்கள் எல்லா வகையிலும் முன்னேறி இன்பமாக வாழ்வீர். எமது ஆசிரம விசேச யாகத்தை முன்னிட்டு இந்த மாந்திரீக மோதிரம் சில நாட்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பெற விரும்புவோர் பெயர் ராசி, பிறந்த தேதி மற்றும் விருப்பம் முதலானவற்றை அவசியம் எழுதவும்.

NARAYAN BHAVAN (M) P.O.Lal Bigha (GAYA)

ரூ.12,50,000 மதிப்புள்ள பரிசுகளை வெல்ல ஓர் பொன்னான வாய்ப்பினை நழுவிடாதீர்! நுழைவு இலவசம்.

| | | |
|---|---|---|
| 6 | 11 | 4 |
| 5 | 7 | 9 |
| 10 | 3 | 8 |

| | | |
|---|---|---|
| | | 5 |
| | 8 | |
| 11 | | |

முதல்பரிசு: மாருதி 800 –2வது பரிசு: ஹீரோ ஹோண்டா, 3வது பரிசு: வெஸ்பா ஸ்கூட்டர், –4வது பரிசு: டிப்ளேயர் கலர் டி.வி.

மற்றும் ஆட்டோமேட்டிக் கலர் காமிரா, ப்ரிட்ஜ், ஏர் கூலர், கோத்ரேஜ் முதலானவை. இதற்காக தாங்கள் செய்ய வேண்டியது இதில் தரப்பட்டுள்ள காலி கட்டத்தில் அதாவது தாங்கள் 4 முதல் 12 வரை உள்ள எண்களை ஒரு எண்ணை ஒரு முறை மட்டுமே உபயோகித்து நிரப்பி விட்டபின் எப்படி கூட்டினாலும் அதன் மொத்த எண்ணிக்கை 24 வரவேண்டும். இதை தபால் கார்டு இன்லேண்ட் லெட்டர் அல்லது கவர் மூலமாக எங்களுக்கு அனுப்பலாம். உடனடியாக அனுப்பி வெற்றி பெறும் முதல் 2000 நபர்களுக்கு ஒரு கலர் கேமிரா இலவசமாக வழங்கப்படுகிறது.

Address: JEEVAN KENDRA (M) P.O. Lal Bigha (Gaya) Pin: 805108

வேணும்..." என்று கேவிக்கேவி அழுதாள்.

அவள் கண்ணீரை துடைத்து முகத்தை தன் மார்பில் பொத்திக் கொள்ள சங்கரின் மனம் பரபரத்தது.

கட்டுப்படுத்திக் கொண்டான்.

## 2



அழுது ஓய்ந்து மௌனமாய் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர்.

சங்கர் இதற்காகவே நிறைய லீவு எடுத்திருந்தான். லீவும் இன்றுடன் முடியப்போகிறது. வேதவல்லி வீட்டில் போட்டது போட்டபடி கிளம்பி வந்து விட்டாள். அதனால் இருவரும் கிளம்பினர்.

"ஆறுதல் சொல்லி சமாதனாப்படுத்த முடியாத அளவுக்கு உன் இழப்பு சாதாரணமானதல்ல புனிதா! அது எனக்கும் தெரியும். ஏன்னா... வெங்கடாசலம் உனக்கு புருஷன் மட்டுமில்லே... எனக்குத் தம்பி! உன்னோட இருபது வருஷம் வாழ்ந்திருக்கான்னா... என்னோட இருபத்தஞ்சு வருஷம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளா வாழ்ந்திருக்கோம். அவனோட இழப்பு எனக்கு சாதாரணமானதல்ல. ஆனா, இதுக்கு மேல நாம என்ன செய்ய முடியும்? அழுதாலும், புரண்டாலும் திரும்ப வரப்போறதில்லே. நினைச்சு நினைச்சு அழுதிட்டிருந்தா துக்கம் குறையாது. நடக்கப் போறதை பத்தி நினை! உன் கடமைகள் விஸ்வரூபமாகத் தெரியும். துக்கம் குறையும்!" புனிதவதியின் கையை ஆறுதலாய் தட்டி கொடுத்தபடி மென்மையாகப் பேசினாள் வேதவல்லி.

"முடியலியே... அழாம இருக்க என்னால முடியலியே! இந்த பிள்ளைங்களை எப்படி கரையேத்தப் போறேனோ தெரியலியே!..

"நாங்கள்லாம் இருக்கறப்ப.... வீணா ஏன் மனசைப் போட்டு குழப்பிக்கறே? யோசிச்சு ஒரு நல்லமுடிவா எடுத்திடுவோம்... கவலைப்படாதே! சங்கர் அந்த பணத்தை காவ்யாகிட்டே கொடுப்பா!"

சங்கர் ஐந்தாயிரம் ரூபாய்களடங்கிய 'நூறு ரூபாய் கட்டை காவ்யாவிடம் நீட்டினான்.

"என்ன மாமா இது?"

"பதினாறாவது நாள் காரியத்துக்கு பணம் தேவைப்படுமே! இப்போதைக்கு இதை வச்சுக்க. ரெண்டு நாள்ல இன்னும் கொஞ்சம் தர்றேன்!"

"ஏற்கனவே நீங்க நிறைய செலவு பண்ணியிருக்கீங்க! அப்பாவோட இறுதி ஊர்வலம் கூட உங்க பணத்தாலதான்..." சொல்லி முடிக்கவிடாமல் அழுகை இடறியது.



"அடடா... என்கிட்டே என்ன கணக்கு வழக்கு? செலவுப் பண்ண எங்களுக்கு உரிமையில்லையா காவ்யா?"

"அதுக்காக... மேலும் மேலும் எங்களை கடனாளியாக்கறீங்களே!"

"இது கடன் இல்லே. கடமை! இதப்பார் காவ்யா... நீ படிச்சவ. நீயும் அழுதுகிட்டிருந்தா... இவங்களுக்கு யார் ஆறுதல் சொல்றது?".

"மாமா... எனக்கொரு ஹெல்ப் பண்ண முடியுமா?"

"இப்படி கேக்கறது, தான் கஷ்டமாயிருக்கு. காத்திருக்கிறேன். என்ன வேணும் சொல்லு!"

"எனக்கொரு வேலை வாங்கித்தர முடியுமா?"

"காவ்யா... என்ன சொல்றே நீ? இன்னும் படிப்பே முடியலே... வேலைக்குப் போகணும்ங்கறே?"

"படிப்பு முடியறவரைக்கும் காத்திருக்கிற மாதிரி எங்க நிலைமை இல்லே மாமா!"

"ஏன்... நாங்க இல்லையா?"

"இப்ப பண்ற உதவியே அதிகம். மேலும் உதவணும்ங்கற மனசு இருக்கே... அதுபோதும் மாமா! ஆனா, நடைமுறை வாழ்க்கைக்கு சில விஷயங்கள் நாளடைவில் ஒத்துப்போகாம போய்டறதும் உண்டு. நம்ம உறவு கடைசி வரைக்கும் ஒரு சிறு கீறல் கூட விழாம... நல்லபடி இருக்கனுன்னா... நான் கேக்கற உதவிய நீங்க செய்யணும்!"

"காவ்யா.... நான் என்ன சொல்றேன்னா..." "ப்ளீஸ் மாமா! நீங்க என்ன சொல்லப்போறீங்கன்னு எனக்குத் தெரியும். அப்பா என்னை நம்பி இவங்களை விட்டுட்டுப் போயிருக்கார். இந்த வீட்டை பொறுத்தவரை நான் ஆண்பிள்ளை. எங்கப்பா இடத்திலேர்ந்து நான் இருந்து வழிநடத்துவேன். என்படிப்புக்கேற்ற எந்த வேலையானாலும் நான் செய்ய தயாராயிருக்கேன். ஏற்பாடு பண்ணுங்க மாமா... ப்ளீஸ்!" கெஞ்சினாள்.

சங்கர் அரைமனதாய் தலையாட்டினான்.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்க... சுபா வாசலுக்கு எழுந்தோடியவள்... அதே வேகத்தில் திரும்பி வந்தாள்.

"அம்மா... புருஷோத்தமன் மாமாவும் அகிலா அத்தையும் வர்றாங்க!"



### ஹைக்கூ

கடவுள் இல்லை

கோயிலை இடிக்கும்

கோபுர ஆலமரம்.

-மா.தமிழ்ப்பரிதி

என்றாள்.

அதற்குள் இருவரும் உள்ளே வந்து விட்டிருந்தனர். அந்த வீட்டின் துக்கம் அவர்கள் முகத்தில் இருந்தது.

"அண்ணா!" என்று அவரைப் பார்த்ததும் உடைந்து போய் அழ ஆரம்பித்தாள் புனிதவதி. அகிலா அவளருகே அமர்ந்து கொண்டாள். அவள் கண்களும் கலங்கியது. புருஷோத்தமன் கண்ணாடியை கழற்றி கர்ச்சீப்பால் கண்களை ஒற்றியெடுத்தார்.

"அழாதேம்மா! கேள்விபட்டு நானே ரொம்ப ஷாக்காயிட்டேன். எனக்கே நேற்றிரவுதான் விஷயம் தெரியும்."

"இல்லே அங்கிள்... அப்பா டெத்தான அன்னைக்கே உங்களுக்கு டெலிகிராம் அனுப்பினேனே!" என்றாள் காவ்யா.

"ஆமாம்மா! ஆனா, நாங்கயாருமே ஊர்ல இல்லை. ரகு ஹைதராபாத் போயிருக்கான். அவனுக்கு இன்னமும் விஷயம் தெரியாது. நானும் அஃபிஷியல் மேட்டருக்காக ராஜஸ்தான் போயிருந்தேன். தனியா இருக்க போரடிக்கும் நானும் உங்களோடு வர்றேனேன்னு அகிலா கேட்டுக் கிட்டதால அவளையும் அழைச்சிட்டுப் போயிட்டேன். நேத்து நைட்டுதாம்மா... சென்னை வந்தோம். டெலிகிராம் பார்த்து பதறிப்போய் உடனே கிளம்பிட்டோம். எப்படிம்மா ஆச்சு?" என்றார் புருஷோத்தமன்.

காவ்யா நடந்தவைகளை மனசு வலிக்க சொன்னாள். "ப்ச்... உங்கப்பா ரொம்ப நல்ல மனுஷன்ம்மா! அவருக்கு இப்படியொரு துர்மரணம் வந்ததுதான் தாங்க முடியலே!" புருஷோத்தமன் நெக்குருகிப் போனார்.

இந்த புருஷோத்தமன் புனிதவதிக்கு அண்ணன். அவளின் பெரியப்பா மகன். பெரிய தொழிலதிபர். சென்னையில் பெரும்புள்ளி. அவருக்கு ஒரே மகன். பெயர் ரகுவர்மன். அவனும் அப்பாவுடன் சேர்ந்து பிஸினஸ் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

புருஷோத்தமன் அந்த வீட்டை கண்களால் துழாவினார்! சொல்லிக் கொள்ளும்படியாக எந்த ஆடம்பரப் பொருளும் அங்கில்லை. அதிகபட்சம் பழங்கால ரேடியோவும், டிவியும்தான் கொஞ்சம் காஸ்ட்லியான பொருட்கள். அந்த வீட்டின் வறுமைநிலை பளிச்சென கண்களில் அறைந்தது. குடும்பத்தலைவன் உயிரோடிருந்த காலத்திலேயே இந்த நிலை! இப்போது இல்லை! இனி என்ன பண்ணுவார்கள்? அதிலும் அத்தனைபேரும் பெண்கள்! புருஷோத்தமனின் இதயம் வெகுவாய் கலவரப்பட்டு கவலைப்பட்டது.

"காவ்யா..."

"என்ன மாமா?"

"உங்கப்பாவை விபத்துக்குள்ளாக்கிய லாரியையோ, அதை ஓட்டி வந்த டிரைவரையோ கண்டுபிடித்து விட்டார்களா?"

"இல்லை மாமா! அவன் தான் நிறுத்தாமலேயேப் போயிட்டானே!



சம்பவத்தை நேரில் பார்த்த பெட்டிக்கடைக்காரர் லாரியை மட்டுமே பார்த்திருக்கிறார். மற்றபடி லாரி எண்ணையோ, டிரைவரையோ பார்க்கவில்லை."

"அடடா...! கண்டு பிடித்திருந்தாலாவது கேஸ போட்டு நஷ்டஈடு வாங்கியிருக்கலாம்!"

"மாமா!" என்று அவரை அதிர்ச்சியோடு நிமிர்ந்து பார்த்த காவ்யாவின் கண்களில் கண்ணீர் பளபளத்தது.

"எப்படி மாமா? அப்பா உயிரை பலியாக்கி அதுலே கிடைக்கிற பணத்தை நாங்க பயன்படுத்துவோம்னு நினைக்கறீங்களா? இல்லே மாமா! அப்படிப்பட்ட பணம் எங்களுக்கு வேண்டாம். யாருக்கு கிடைப்பாங்க இப்படியொரு அப்பா? கவிதை எழுதற அப்பா எத்தனை பேருக்கு கிடைக்கும்? எங்களுக்கு கிடைச்சார். அதுவே எங்களுக்குப் பெருமைதான்! ஆனா, கடவுள் ரொம்ப அநியாயக்காரன் மாமா! இருந்திருந்தா... ஆண் துணையே இல்லாத இந்த வீட்லே இருந்த ஒரே ஆண் துணையை இப்படி அநியாயமா பறிச்சுப்பானா?"



## ஹைக்கூ

உதிர்ந்த புளியம் பூக்களுக்குள்
மங்கலாய்த் தெரியும்
பள்ளி நாட்கள்.

-க. அம்சப்ரியா

"காவ்யா... இந்த வீட்லேயே நீதான் கொஞ்சம் தெளிவானவள்னு சந்தோஷப்பட்டேன். நீயே இப்படி உடைஞ்சு போயிட்டா எப்படிம்மா?"

"அதானே... பாரு நீ அழறதைப் பார்த்து உங்கம்மா அழறாங்க?" அகிலா உரிமையோடு அதட்டினாள்.

காவ்யா சட்டென கண்களை துடைத்துக் கொண்டாள்.

"தட்ஸ் குட்!" என்று அவள் கன்னத்தில் மெல்ல தட்டி பாராட்டினார்.

"சரி... அடுத்து என்ன செய்யப் போறதா உத்தேசம்?"

"எங்களுக்கு கொஞ்சம் நிலமிருக்கு மாமா! அப்பா இருந்தப்பவே பெரிசா ஒண்ணும் கிடைச்சிடலே. இப்ப அதை யாருக்காவது குத்தகை விட்டுடலாம்னு இருக்கோம்!"

"அதுல வர்ற வருமானம் பத்து நாள் கூட முழுசா சாப்பிட

முடியாதேம்மா!"

"ஆமா அங்கிள்! ஆனா, எப்படியாவது எங்கப்பா இடத்தில இருந்து என் குடும்பத்தை காப்பாத்துவேன். என் தங்கைகளை நல்லா படிக்க வைப்பேன்!"

"உனக்குள்ளே இப்படியொரு வைராக்கியம் இருக்கறத பாராட்ட வேண்டிய விஷயம். சரி.. இதுக்கெல்லாம் பணம் வேணுமே..."

"அதான்.. வேலைக்குப் போகலாம்னு இருக்கிறேன்"

"வேலைக்கு.. அதுவும் இந்த சீர்காழியிலா? நல்லா யோசிச்சுதான் சொல்றியா?" சிரித்தபடி கேட்டார். அந்த சிரிப்பில் கேலியோ, கிண்டலோ ஒளிந்திருந்தது புரிந்தது.

"........!?"

"முழுசா படிப்பை முடிக்காம, டெக்னிக்கல் கோர்ஸ் ஏதும் தெரியாத, முன் அனுபவம் இல்லாத உனக்கு இந்த சின்ன ஊர்ல என்ன வேலைம்மா கிடைச்சிடப் போவுது? அப்படியே கிடைச்சாலும் அதிக பட்சம் ஐநூறு, அறநூறு சம்பளம் கிடைக்கும்மா?".

"அங்கிள்!" என்று பரிதாபமாய் பார்த்தாள். 'என் வேலை முயற்சிக்குப் பின்னே இத்தனை பிரச்னைகள் இருக்கிறதா? முடிக்க வேண்டிய கடமைகள் வரிசையில் காத்திருக்க.. எப்படி முடிக்கப் போகிறேன்.'

"என்னம்மா பயந்திட்டியா?"

"........!?"

காவ்யா மட்டுமல்ல... புனிதவதியின் கண்களில் கூட கலவரம் மி தந்தது.

"இப்ப என்ன பண்றது அங்கிள்?"

"நான் ஒரு முடிவோடதான் இங்கே வந்தேன். இதுக்கு நீயோ, என் தங்கையோ மறுக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும்!" பீடிகையோடு ஆரம்பித்தார்.

அனைவரும் ஆவலோடு அவரை நிமிர்ந்து பார்த்தனர். அகிலாவும், 'இவர் என்ன திட்டத்தோடு வந்திருக்கிறார்?' என்று புரியாமல் கணவனை ஏறிட்டாள்.

புருஷோத்தமன் தொண்டையை செருமிக் கொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

***

"என்ன தம்பி.. சரியாவே சாப்பிடலே.. அதுக்குள்ளே 'கையை கழுவிட்டே?" வேதவல்லி மகனை கவலையோடு பார்த்தாள்.

"போதும்மா.. பிடிக்கலே!"

"உனக்கு பிடிச்ச முள்ளங்கி சாம்பார், புடலங்காய் கூட்டு, புதினா துவையல்னு தானேப்பா சமைச்சிருக்கேன்?".

"பிடிச்சதை ரசிச்சி சாப்பிடற மனநிலையில் நான் இல்லேம்மா!"



துண்டால் கையை துடைத்தவனின் கண்கள் இலக்கின்றி எங்கோ வெறித்தது.

"உன் மனசு எனக்குப் புரியுது தம்பி! உன் மாமனோட அகால மரணம் உன்னை ரொம்ப பாதிச்சிருக்கு. நடந்தது நடந்து போச்சி. அதையே நினைச்சி ஆகப்போறதென்ன? வெங்கடாசலம் ஒரு புழு பூச்சிக்குக் கூட தீங்கு பண்ணமாட்டான். ஆனால் அவனோட உயிர் துள்ள துடிக்க போயிடுச்சேன்னு மனசு கிடந்து தவிக்குது. இதையெல்லாம் பார்க்கறப்ப கடவுள் இருக்காரான்னு சந்தேகமாக இருக்குப்பா!" அந்த இடத்தை சுத்தம் செய்தபடி பேசினாள்.

"நாம இருக்கும் போது... நாம வற்புறுத்தி ரெண்டு வாய் சாப்பிட வச்சோம்! இப்ப அவங்க சாப்பிட்டிருப்பாங்களான்னு மட்டுமில்லே.. சமைச்சிருப்பாங்களான்னே சந்தேகமாக இருக்கும்மா!..."



ஹைக்கூ

விரக்தியின்
விளிம்பில் பாறைகள்
யாரேனும் சிற்பம் வடியுங்கள்
-மகா.மதிவாணன்.

வேதா மகனை ஊன்றி கவனித்தாள். மாமா இறந்த துக்கத்தையும் மீறி அவனுள் வேறொரு புதிய கவலை வேரூன்றி இருப்பது புரிந்தது.

"எனக்கும் இந்த கவலை இல்லேன்னா நினைக்கிறே? எல்லாம் காலப்போக்குல சரியாய் போய்டும் சங்கர்!"

"காவ்யா வேலைக்கு போகணும்னு பிடிவாதமா இருக்கிறா! அவ வேலைக்கு போறது அவ்வளவு சரியா வராதும்மா. அவ படிப்புக்கு இந்த ஊர்ல வேலை கிடைச்சாலும் சம்பளம் போதுமான அளவுக்குக் கூட தர மாட்டாங்க! அந்த குறைஞ்ச சம்பளத்துக்கு ஓடியாடி கஷ்டப்படணுமான்னு தோணுது!"

வேதா சிரித்தாள்.

"அதுக்கென்னப்பா பண்றது. ஒரு நல்ல பிள்ளையாண்டான் காவ்யாவுக்கு கிடைக்கணும் அவளையும் ஏத்துக்கிட்டு, அந்த குடும்பத்தையும் பொறுப்பா சுமக்கிற நல் மனசுள்ளவன் கிடைச்சான்னா.. எல்லாப் பிரச்னையும் தீர்ந்திடும். இந்த காலத்திலே அப்படி யார் இருக்கா?" பெருமூச்சு விட்டபடி ஓரக்கண்ணால

மகளை பார்த்தாள்.

"ஏம்மா... நான் இல்லையா?" சட்டென வெளிப்பட்டது வார்த்தை அடுத்த கணமே தன் அவசரபுத்தியை நொந்தபடி நாக்கை கடித்துக் கொண்டான்.

" உன் வாயிலிருந்து இந்த வார்த்தை வரட்டும்னு தான் காத்திருந்தேன்.! உன்னைவிட ஒரு நல்ல பிள்ளை காவ்யாவுக்கு கிடைக்கமாட்டான். சொந்தத்துக்கு சொந்தம். என் தம்பி குடும்பம் நல்லாயிருக்கணும்னா அது உன்னாலதான் முடியும். இந்த விஷயம் கேள்விப்பட்டா உங்க அத்தை மனசுக்கு ஆறுதலாயிருக்கும். நாளைக்கே போய் பேசுவோம். ஒரு வருஷம் போகட்டும். கல்யாணம் நடத்திடலாம். இப்ப சந்தோஷம் தானே?"

"ரொம்ப..' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டே சிரித்தபடி தலையாட்டினான் சங்கர்.

## 3



அத்தனை பேர் கண்களும் புருஷோத்தமனின் முகத்தில் பதிந்திருந்தது.

"சொல்லுங்க அங்கிள்" என்றாள் ஆவலுடன் காவ்யா.

"நீ சென்னைக்கு வரணும்!"

"நானா? சென்னைக்கா? ஏன் அங்கிள்?" ஆச்சர்யமாய் கேட்டாள்,

"எல்லாம் நல்லதுக்குதான்! உனக்கு எங்க கம்பெனியிலேயே வேலை போட்டு தரப்போகிறேன்!"

"உங்க கம்பெனியிலா?"

"அதானே.. அவளுக்கு அந்த வேலையெல்லாம் என்ன தெரியும்? நிறைய படிச்ச, கம்ப்யூட்டர் கோர்ஸ் முடிச்சவங்க வேலை செய்யற இடமாச்சே?" என்றாள் அகிலா.

"அகிலா.. நீ கொஞ்சம் சும்மாயிரு.. எல்லாம் எனக்குத் தெரியும்!"

அவரின் அதட்டலுக்கு கப்சிப்பென வாயை மூடிக் கொண்டாலும் அகிலாவின் உள்ளம் அமைதி இழந்தது.

"காவ்யா படிச்ச அரைகுறை படிப்புக்கு எந்த வேலையும் கிடைக்காது. அதனால அவளை என்னோட அழைச்சிட்டுப் போறேன். எல்லாரும் எக்ஸ்பீரியன்ஸோட, எல்லாத்தகுதிகளோடும் வேலைக்கு வரணும்னு எதிர்பார்த்தா நடக்குமா? யாராவது வேலை வாய்ப்பு கொடுத்தாலதானே அனுபவம் கிடைக்கும்? காவ்யா அங்கே வந்து வேலையை கத்துக்கட்டும். அவளோட புத்திசாலித்தனத்துக்கு ரொம்ப சீக்கிரம் பிக்கப் ஆயிடுவா! மேற்கொண்டு படிக்கட்டும், கம்ப்யூட்டர் கிளாஸ் போகட்டும்..."



"அ...ங்...கி...ள்!" என்றாள் நம்ப முடியாமல்.

"இரும்மா.... முழுசா சொல்லி முடிச்சிடறேன். உனக்கு மாசம் ஆறாயிரம் சம்பளம்! தவிர, வினிதா, சுடர்வோட படிப்பு செலவை என் கம்பெனி சார்பா நடத்தற அறக்கட்டளையே ஏற்றுக் கொள்ளும். இப்ப சந்தோஷம்தானே காவ்யா?"

காவ்யாவிற்கு பேச்சே எழும்பவில்லை. மனசு நிறைந்திருந்ததில் கண்ணீர் எட்டிப்பார்த்தது. கை கூப்பி அவரை வணங்கினாள்.

"சேச்சே... என்ன இது? கையை கீழேப்போடு!" அன்புடன் கண்டித்தார்.

அகிலா மனம் பொருமினாள்.

'இந்த மனுஷனுக்கு என்னாச்சு? என்கிட்டே ஒரு வார்த்தைக் கூட கலந்தாலோசிக்காம இஷ்டத்துக்கு அறிக்கை வாசிக்கிறார்?'



### ஹைக்கூ

தம்பியின்
காதணி விழாவில்
வெறுங்காதோடு அக்கா!

-ஏகாதேசி

"அண்ணா... தெய்வம் மாதிரி வந்து இவ்வளவு உதவிகள் செய்யறீங்களே... உங்களை நான்சாகும் வரை மறக்க மாட்டேன்!"

"பைத்தியம் மாதிரி பேசாதே.. இது என் கடமை!"

"அண்ணா... காவ்யாவுக்கு சென்னை புதுசு. அவளை நீங்கதான் ஒரு நல்ல ஹாஸ்டலா பார்த்து சேர்த்து விடணும்?"

"ஏம்மா... என்னை என்ன அவ்வளவு சுயநலக்காரன்னா நினைச்சே? கடல்மாதிரி என் வீடு இருக்கறப்ப. காவ்யாவை ஹாஸ்டல்ல தங்க விடுவேனா? என்னம்மா பேசறே?" என்றார் கோபமாய்.

'போச்சுடா... இந்த மனுஷனுக்கு நிச்சயமா புத்தி கெட்டுதான் போயிருக்கு! வயசுப் பிள்ளை இருக்கிற வீட்லே இவளை தங்க வைக்கப் போகிறாராம். வெளியே வரட்டும் பேசிக்கறேன்.' அகிலாவினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"என்னம்மா காவ்யா... ஒண்ணுமே பேச மாட்டேங்கிறே?"

"என்ன பேசறதுன்னு புரியலே அங்கிள்! இருட்டுல வழி தெரியாம தவிச்சுக்கிட்டிருந்த எங்களுக்கு பிரகாசமான வழியை காண்பிச்சிருக்கீங்க. நன்றின்னு ஒரு வார்த்தையிலே சொல்லி முடிச்சிட

முடியாது. அதுக்கும் மேல ஒண்ணு இருக்கு. என் கண்களுக்கு கடவுளா தெரியுறீங்க. அப்பாவோட ஆத்மா நிச்சயம் சந்தோஷப்படும்." என்றாள் நெகிழ்ச்சியாய்.

"சரிம்மா... நாங்க கிளம்பறோம். ரெண்டுநாள்ல நான் மறுபடி வருவேன். நீ புறப்பட தய்யாராயிரு!" என்று எழுந்துக் கொண்டார் புருஷோத்தமன்.

காவ்யாவின் மனசு முழுக்க... நிம்மதி வியாபித்திருந்தது.

தன் மிகப்பெரிய பிரச்னைகளுக்கு இவ்வளவு எளிதில் தீர்வு கிடைத்துவிடும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

காவ்யா சுவரில் மாட்டப்பட்டிருந்த தன் தந்தையின் போட்டோவை நிமிர்ந்து பார்த்தாள். கதம்ப மலர்களுக்கு நடுவே பொட்டு வைக்கப்பட்ட அப்பா இவளையே பார்த்து சிரித்துக் கொண்டிருப்பது போல் இருந்தது.

'அப்பா... ஏம்ப்பா... எங்களையெல்லாம் விட்டுட்டு போனீங்க? பார்த்து வந்திருக்கக்கூடாதாப்பா? லாரி உருவில் எமன் வந்து உங்களை எங்களிடமிருந்து பிரித்துக் கொண்டு போய்விட்டானே? எனக்கு வாட்ச் வாங்கித்தர்றேன்னு சொல்லிக்கிட்டிருந்தீங்களே! எப்பப்பா வாங்கித்தரப்போறீங்க? இனி எப்ப உங்களை பார்க்கப் போகிறேன்? குடும்பம் மொத்தமும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடுவோமே! இப்ப நீங்க இல்லாம எங்களால சாப்பிடமுடியலேப்பா! எங்களை பிரிஞ்சு எங்கே போய்ட்டீங்க? உங்களுக்கு பசிக்குமா? பசிச்சா எப்படி சாப்பிடுவீங்க?' அப்பாவின் போட்டோ முன் சிறு குழந்தையாய் மாறிப் பேசினாள் காவ்யா.

'அப்பா... நீங்க எங்களை விட்டு பிரிஞ்சுப்போகப்போறீங்கன்னு முன்னமேயே உணர்ந்துட்டீங்களாப்பா? அதனாலதான்' உன்னை நம்பிதான் எல்லாரையும் விட்டுட்டுப் போறேன்னு சொன்னீங்களா? நம்ம குடும்பம் அவஸ்தைப் படக்கூடான்னு தான் புருஷோத்தமன் மாமா மூலமா எனக்கொரு வேலைக்கு ஏற்பாடு பண்ணீங்களா?

கழனிப்பக்கமே வராதே! பூச்சிப் பொட்டு கடிச்சிடும்னு சொல்வீங்களே! குழந்தையா பாவிச்ச என்னை குடும்பத்தலைவியா ஆக்கிட்டுப் போய்ட்டீங்களே! ஸ்கூல்ல, காலேஜ்ல கூட என்னை டூருக்கு அனுப்ப மாட்டீங்க! அப்படி பொத்தி பொத்தி வளர்த்த உங்க பொண்ணு... சீர்காழியத்தவிர வேற ஊரை பார்த்தறியாத உங்க காவ்யா... நாளைக்கு சென்னைக்குப் போகப் போறேன்.! என்னை ஆசீர்வாதம் பண்ணுப்பா!' தன் முகத்தை போட்டோவில் ஒட்டிக்கொண்டாள்.

***

சங்கர் தன் ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு விட்டு தின்பண்டங்கள் அடங்கிய பையுடன் உள்ளே நுழைந்தான். அவனைத்



தொடர்ந்து வேதாவும் உள்ளே சென்றாள்.

பாழ் நெற்றியுடன் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்த புனிதவதியைப் பார்த்ததும் காசனம் பொங்கியது.

எதிர்பட்ட காவ்யா இவர்களைப் பார்த்ததும் சின்னதாய் முறுவலித்தாள்.

"வாங்க அத்தே... வாங்க மாமா! என்ன ஆச்சர்யம்? இன்னைக்கு நானே உங்களைப் பார்க்க வரணும்னு நினைச்சிட்டிருந்தேன்!" என்றாள் காவ்யா.

"நிஜமாவா? என்னம்மா விஷயம்?"

"சொல்றேன்! முதல்ல உட்காருங்க... காபி எடுத்துக்கிட்டு வர்றேன்" என்று சமையல் கட்டிற்குள் நுழைந்தாள்.

"நீ இரு காவ்யா... நான் காபி போடறேன்."

"பரவாயில்லேம்மா... நானே போட்டு எடுத்துக்கிட்டு வர்றேன்" என்று போய் விட்டாள்.



ஹைக்கூ

சுற்றிலும் குப்பைகள்
சுத்தமாய் இருந்தது
குப்பைத் தொட்டி

-க.இராமச்சந்திரன்

"இந்தா சுபா... இதையெல்லாம் உள்ளே கொண்டு வை!" பையை சுபாவிடம் நீட்டினாள்.

"எதுக்குப்பா இதெல்லாம்?" என்றாள் சங்கடமாக புனிதவதி.

"ஏன் வாங்கி வந்தா என்ன? அவனுக்கில்லாத உரிமையா இந்த வீட்டு இன்ப துன்பங்கள்ல அவனுக்கும் பங்கிருக்கறப்ப. இந்த சின்ன செலவைக்கூட அவன் பண்ணக்கூடாதா என்ன?" என்றாள் வேதா.

"அதுக்காக சொல்லலே... எதுக்கு வீண் செலவுன்னு தான்..."

"இந்த குடும்பத்தையே சுமக்கப்போகிறான் சங்கர். வீண்செலவு அதுஇதுன்ன பேசி சங்கடப்படுத்தாதே!"

"யாரு... என்ன சுமக்கப்போறாங்க? இந்தாங்க!"

"மொதல்ல இந்த காபிய சாப்பிட்டுட்டு பிறகு சொல்லுங்க" என்றபடி அவர்களிடம் நீட்டினாள் காவ்யா.

"சொல்லேன்மா" என்று கண்களால் ஜாடை காட்டினான் சங்கர். சரியென்று தலையாட்டினாள் வேதா.

"சங்கர் யாரு? உன்னோட சொந்த அத்தைப் பையன் என்

தம்பிக்குப் பிறகு இந்த குடும்பத்தை கட்டிக் காப்பாத்தப் போகிறவன் சங்கர் தானே?" என்று பூடகமாய் ஆரம்பித்தாள்.

" ஆமா அத்தே! இந்த குடும்பத்து மேல நிஜமான அக்கறை உள்ளவர் மாமாதான். உரிமை கடமைங்கறது இரண்டாம் பட்சம். முதல்ல... பிறருக்கு உதவுற மனோபாவம் இருக்கணும். அந்த மனிதாபிமானம் சங்கர் மாமாகிட்டே இருக்கு நாங்கள்லாம் உங்களுக்கு ரொம்பி கடன் பட்டிருக்கோம்!"

"இந்த பேச்செல்லாம் விடு! நாங்க இன்னைக்கு ஒரு முக்கியமான விஷயம் பேசத்தான் இங்கே வந்தோம். அதைக்கேட்டா நிச்சயம் நீங்க அத்தனை பேரும் சந்தோஷப்படுவீங்க. இந்த வீட்டு பிரச்னை எல்லாம் தீரப்போகுது!"

"ம்... அது என்ன விஷயம்னு எனக்கும் தெரியும்" என்றாள் குறுஞ்சிரிப்புடன்.

"உனக்குத் தெரியுமா? எப்படி? ஏன் தம்பி... நீ முன்னாடியே இவகிட்டே சொல்லிட்டியா?" வியப்புடன் கேட்டாள் வேதா!

புனிதவதி இவர்கள் பேசுவதை புரிந்தும் புரியமால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இல்லையேம்மா... இன்னைக்குதானே நான் காவ்யாவைப் பார்க்கிறேன்."

"பிறகெப்படி தெரிஞ்சது?"

"ரொம்ப குழம்பாதீங்க. நானே சொல்லிடறேன். நான்மாமாகிட்டே எனக்கொரு வேலைக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லியிருந்தேன். இப்ப எனக்கொரு வேலைக்கு ஏற்பாடு பண்ணிட்டார். இதானே விஷயம்?"

"காவ்யா" என்றாள் குழப்பமாய் வேதா.

"ஆடிா... அத்தே... இப்ப இந்த வேலைய ஏத்துக்க முடியாத நிலைமையில நானிருக்கிறேன்."

"என்னடி புரியாம பேசறே?"

"இல்லே அத்தே. நான் தெளிவாதான் இருக்கேன். நீங்க இந்த குடும்பத்துக்காக ரொம்ப அக்கறை எடுத்துக்கிட்டீங்க. நிறைய செலவு பண்ணியிருக்கிங்க. அதை நான் கடமையா நினைக்கலே... கடனாகதான் நினைக்கிறேன். அந்த கடனையெல்லாம் அடைக்கறதுக்கு கடவுள எனக்கொரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்!"

"காவ்யா... என்ன சொல்றே நீ? " சுத்தமாய் அவள் சொல்வது எதுவும் புரியாமல் திகைத்துப் போயிருந்த சங்கர் கேட்டான்.

"நேத்து புருஷோத்தமன் அங்கிள் இங்கே வந்திருந்தார்!" "யாரு... சென்னையிலே இருக்கிறாரே... அவரா?"

"ஆமாம்... அவரேதான்! இங்கே உனக்கு வேலை கிடைச்சாலும் ஐநூறு, அறுநூறுக்கு மேலே சம்பளம் தரமாட்டாங்க பேசாம என் கம்பெனிக்கே வந்துடு. ஆறாயிரம் சம்பளம் தந்துடறேன், என் வீட்டிலேயே தங்கிக்கலாம்னு சொல்லிவிட்டார். வினிதா, சுபாவோட



படிப்பு செலவைக்கூட அவர் நடத்தற டிரஸ்ட்டே ஏத்துக்கும்னு சொல்லிவிட்டார். நாளைக்கு சென்னைக்கு போகிறேன். அங்கிள் வந்து அழைச்சிட்டுப் போவார். இதை சொல்லிவிட்டுப் போகத்தான் உங்க வீட்டுக்கு வரணுமனு நினைச்சிட்டிருந்தேன். அதுக்குள்ளே நீங்களே வந்துட்டீங்க!"

சங்கர் பரிதாபமாய் தாயைப் பார்த்தான்.

வேதவல்லி புனிதவதியை ஏறிட்டாள்.

"என்ன... காவ்யா என்னென்னவோ சொல்றாளே! அதெல்லாம் நிஜமா?"

"ஆமாங்க... நாங்களே எதிர்பார்க்காத அளவுக்கு எங்கண்ணன் நல்ல வழியை காண்பிச்சிருக்கார்."

"அப்ப... காவ்யாவை சென்னைக்கு அனுப்பறதுன்னு முடிவு பண்ணிட்டியா?"

"ஆமா... யாரு எவங்க? எங்கண்ணன் கம்பெனியிலதானே வேலை செய்யப் போறா... எங்கண்ணன் வீட்லே தான் தங்கப்போறா! பிறகென்ன பயம்?"



ஹைக்கூ

நிறைந்து விட்டதோ
அரசுத் தொட்டில்!
குப்பைத் தொட்டியில்
குழந்தை.

-மு.தன கோபாலன்.

"புரியாம பேசாதே! காவ்யா வயசுப் பொண்ணு அவளைப் போய் அங்கே..."

"அம்மா..." என்று வேதாவின் கையைத்தொட்டு மேற்கொண்டு பேசவிடாமல் தடுத்தான் சங்கர்.

"இல்லே சங்கர்..."

"காவ்யாவை அவங்கப்பா இந்த ஊருக்குள்ளேயே பொத்தி வச்சு வளர்த்துட்டார். அவளும் இந்த உலகத்தை புரிஞ்சுக்கட்டுமே! அவ ஒண்ணும் யாரோ விலாசம் தெரியாத ஆள்கிட்டே வேலை செய்யப் போறதில்லையே. உறவுக்கார புருஷோத்தமன் அங்கிள் கிட்டே தானே? நம்மள மாதிரியே அவருக்கும் இந்த குடும்பத்து மேலே அக்கறை இருக்கு. எல்லாத்துக்கும் மேலே காவ்யா சென்னைக்கு புறப்பட தயாராயிட்டா. அவளை டிஸ்டர்ப் பண்றது சரியில்லேம்மா! ஆனா, காவ்யா... என்னோட ஒரே ஒரு வேண்டுகோள்"

"என்ன மாமா?"

"வேலைக்கு போய் சம்பாதிச்சி பட்ட கடனையெல்லாம் அடைக்கணும்னு சொன்னியே! அதை மட்டும் வாபஸ் வாங்கிடு! இப்பவும் சொல்றேன். அதெல்லாம் கடன் இல்லே! எங்க கடமை! எங்க அன்புக்கு விலை போட்றாதே காவ்யா.. ப்ளீஸ்!" என்றான் சங்கர்.

காவ்யா சிலைபோல் நின்றிருந்தாள்.

## 4



"ரொம்ப பிடிவாதம் பிடிக்க ஆரம்பிச்சிட்டே அகிலா! உனக்கு என்ன ஆச்சு?" சட்டை பட்டனை போட்டபடி மனைவியை ஏறிட்டார்.

"எனக்கொன்றும் ஆகலே.. உங்களுக்குத்தான் புத்தி பிசகிப் போச்சு!"

"என்ன..நீ.. எதை பேசினாலும் ஏடாகூடமா பதில் சொல்றே? ஏன் இப்படி பேசறே? எதுவாயிருந்தாலும் பளிச்சுனு புரியறமாதிரி பேசு."

"என் பேச்சு எடுபடுமா? என்னையும் ஒரு மனுஷியா மதிச்சிருந்தா.. ஒரு வார்த்தை என்கிட்டே கேட்டுட்டு இல்லே வாக்கு குடுத்திருப்பீங்க!"

"மறுபடியும் குழப்பறே! உன்கிட்டே என்ன கேக்கலே என்ன வாக்கு கொடுத்தேன்?"

"காவ்யாவுக்கு நம்ம கம்பெனியிலே வேலை குடுக்கறதைப் பத்திதான் சொல்றேன்!"

"ஏன்.. அவளுக்கு வேலை குடுக்கறதால நம்ம ஆஸ்தி குறைஞ்சிடுமா அகிலா?" என்றார் கிண்டலாய்.

"........"

"நீயே பலபேருக்கு உதவியிருக்கே! பாவம் காவ்யா. தகப்பனை இழந்து குடும்பத்தை காப்பாத்த தவிச்சிட்டிருக்கா! நம்மால ஈஸியா அவளுக்கு கை கொடுக்க முடியும்ங்கறப்ப.. கையை கட்டிக்கிட்டு, மனசை கல்லாக்கிக்க சொல்றியா?"

"பாருங்க.. அந்தளவுக்கு நான் கல்நெஞ்சுக்காரியில்லே. காவ்யா மேலயோ, அந்த குடும்பத்து மேலயோ, தனிப்பட்ட விருப்பு வெறுப்பு எதுவும் இல்லே. அந்த குடும்பத்துக்கு உதவுறதை பத்தி நான் எதுவும் சொல்லலே! அதை இப்படித்தான் உதவணும்னு இல்லையே! அந்தப் பொண்ணுக்கு அந்த ஊர்லேயே உங்க செல்வாக்கை பயன்படுத்தி ஒரு வேலை வாங்கிக் கொடுத்திருக்கலாம். ஒரு தொகையை அவங்க குடும்பத்துக்கு கொடுத்து பிரச்னையை முடிச்சிருக்கலாம். அதை விட்டுட்டு.."



"நீ சொன்னது எதுவும் சரியில்லே அகிலா. அந்த ஊர்ல காவ்யாவுக்கு ஒரு வேலை வாங்கித்தர என்னால முடியும்தான்! ஆனா, அவளுக்கு கிடைக்கிற சம்பளம் நாலு வயித்துக்கு ஒரு வேளை சாப்பாடுதான் சாப்பிட முடியும். நான் அவங்க பிரச்னைக்கு நிரந்தர தீர்வு தரணும்னு ஆசைப்படறேன் அகிலா. அதுவும் என் தங்கை குடும்பம் நடுத்தெருவிலே நிக்கறதைப் பார்த்து நான் சும்மாயிருக்க முடியுமா? நான் எடுத்த முடிவு நல்ல முடிவுங்கற திருப்தி எனக்கிருக்கு!"



ஹைக்கூ

கடவுள் முன்
கையேந்தினர்
வாசலிலிருந்து
ரசித்தான் பிச்சைக்காரன்!

-தோழன் ராஜா

"புரியாம பேசாதீங்க! வயசு பிள்ளை இருக்கிற வீட்லே வயசுப் பொண்ணை தங்க வைக்கணும்ங்கறீங்களே.. இது நல்ல முடிவா?"

"வொய் நாட்? அகிலா... உன் பயம் புரியுது. காவ்யா இந்த வீட்டு ம, ரு ம க ளா வந்துடப்போறாளோங்கிற பயம்; அப்படித்தானே?"

"ஆமாங்க" என்றாள் அவசரமாக.

"அதுதான விதி.. என்றால்... வரட்டுமே.. என்ன இப்ப?"என்றார் கூலாக.

"ஓகோ.. எல்லாம் திட்டம் போட்டுதான்காயை நகர்த்தறீங்களா? உங்க திட்டம் நிறைவேறாது. நான் அதை அனுமதிக்க மாட்டேன்!"

"டென்ஷனாகாதே!" எனக்கும் அப்படியொரு எண்ணமில்லே. அதுக்காகவே காவ்யாவை இங்கே வரவைக்கவுமில்லே! கல்யாணம்ங்கறது ரகுவோட விருப்பத்தைப் பொறுத்த விஷயம். அவன் விருப்பப்பட்டா நிச்சயமா அதுவும் நடக்கும்!"

"ரகு... அப்படிப்பட்டவனில்லே"

"அப்ப ஏன் அலர்றே? அமைதியாயிரு! எனக்கு நேரமாச்சு. நான் சீர்காழிக்கு கிளம்பறேன். கூட நீ வரப்போறியா, இல்லையா?"

"இல்லே... நான் வரலே!"

"சரி.. வரலேன்னா விடு! நான் மட்டும் போறேன். ஒரு விஷயம் அகிலா! காவ்யா ரொம்ப பாவம். தகப்பனை இழந்தப் பொண்ணு.

உன் கோபத்தை எல்லாம் அவகிட்டே காட்டதே! மீறி நடந்தியானா... அது என்னை அவமான்ப்படுத்தறமாதிரி. அடுத்த நிமிஷமே வீட்டை விட்டு வெளியேறிடுவேன். புரியுதா?" கூறிவிட்டு வேகமாய் நடந்து வாசலுக்கு வந்தார். டிரைவர், அவர் வருவதைப்பார்த்ததும் கார் கதவைத் திறந்து வைத்தான்.

***

ஏஸி காரில் பய்ணப்படுவது இதுதான் முதல் முறை காவ்யாவிற்கு. டிரைவர் ஓட்ட பின்புறம் புருஷோத்தமனும் காவ்யாவும் அமர்ந்திருந்தனர். காவ்யா அந்த ஊரைவிட்டு வேறெங்கும் சென்றதில்லை. பஸ்ஸை தவிர வேறெதிலும் பயணித்ததில்லை.

கிராமத்தில் பச்சை பசேல் வரப்புகளின் நெற்பயிர் வாசம் கலந்த மாசிலா காற்றையே சுவாசித்துப் பழகியிருந்தவளுக்கு ஏஸி காற்று உடம்பை நடுங்க வைத்தது. கை தன்னிச்சையாக சுடிதார் துப்பட்டாவை இழுத்துப் போர்த்தியது.

திரும்பிப் பார்த்த புருஷோத்தமன் சத்தம் வராமல் சிரித்தார்.

"என்னம்மா...குளிருதா?"

"அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே அங்கிள்!"

"உன் நடுக்கமே காட்டிக் கொடுக்குதே! பழகிக்க காவ்யா.... இனி இதெல்லாம் உன் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும். நம்ம வீட்லே மட்டுமில்லே... நீ வேலை செய்யப் போகிற ஆபீஸ் முழுக்கவே ஏஸிதான்! அதனால வேற வழியில்லாம பழகிக்க..."

"ச... சரி அங்கிள்!"

"அங்கே எல்லோரிடமும் சரளமா பேசணும், மரியாதையோட நடந்துக்கணும்."

"நிச்சயமா அங்கிள்! என்னால நீங்க பெருமைப் படறமாதிரிதான் நடந்துப்பேன்!"

"வெரிகுட்! அப்புறம் முக்கியமான விஷயம். உன் அகிலா அத்தை இருக்கிறாளே... அதாம்மா.. என்னோட சகதர்மினி... ரொம்ப நல்லவ! மனசில ஒண்ணுமே இல்லேன்னாக்கூட, காரணமேயில்லாம சத்தம் போடுவா! சில சமயம் மனசு புண்படும்படிக் கூட பேசிடுவா! அதுக்காக நீ...."

அவர் கூறி முடிக்கவில்லை. இடையில் புகுந்தாள்.

"நான் தப்பா எடுத்துக்க மாட்டேன் அங்கிள்! என்னை கோபிக்கவோ, அடிக்கவோக்கூட் அத்தைக்கு உரிமை இருக்கிறப்ப... நான் எதையும் பெரிசுபடுத்த மாட்டேன் அங்கிள்!"

"தாங்க்ஸ்டா...!" என்று அவள் தலையை கோதி விட்டார்.

"உங்க ஆபீஸ் அட்மினிஸ்ட்ரேஷன் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. அதையெல்லாம் கற்றுக் கொள்ள நாளானாலும் நீங்க பொறுத்துக்கணும் அங்கிள்!"



"ம் கூம்... நான் இதிலே ஒண்ணும் பண்ணமுடியாது!"

"அ...ங்...கி...ள்!" முகத்தில் கலவரம்.

"என்ன பயந்திட்டியா? ஆபீஸ என் பொறுப்பில் இல்லே காவ்யா! நான் ஃபாக்டரியிலதான் இருப்பேன்."

"அப்ப ஆபீஸ்லே?"

"ரகுவர்மன் தான் இன்சார்ஜ்! உன்னோட அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர்ல கூட அவன்தான் கையெழுத்துப் போடணும். அவன் இன்னும் ஊருக்கு வரலே. உன்னோட வேலை விஷயம் கூட அவனுக்கு தெரியாது!"

"அப்போ... வேலை இல்லைன்னு சொல்லிட்டா?"

"சொந்த அத்தை மகளுக்கு வேலை இல்லேன்னு சொல்லிவிடுவானா பயல்? பயப்படாதே! என் பிள்ளை என் பேச்சை தட்டமாட்டான்!" மகனைப்பற்றி பெருமையாக சொன்னார்.



ஹைக்கூ

யார் சொல்வார்கள்
எதிர் காலம்!
ஆசைப்பட்டது கிளி!

-கலை.ஆனந்தன்.

காவ்யாவின் மனம் அவன் உருவத்தை கண்முன் கொண்டு வர முயன்றது.

ஓரிருமுறை ரகுவர்மனை சிறுவயதில் பார்த்த ஞாபகம். பத்து வருடத்திற்கு மேல் இருக்கலாம். அங்கிளோடு சீர்காழிக்கு வந்திருக்கிறான். அவனோடு கைகோர்த்து விளையாடியதாய் நினைவுக்கூட இருந்தது. அந்த பழைய முகமே தெளிவற்று நினைவுத்திரையில் பதிந்திருந்தபோது... இப்போது எப்படி இருப்பான் என்று கற்பனை பண்ணுவது அபத்தம்.

சென்னையை அடைந்தபோது... புதிய உலகத்தில் கால் பதித்ததுப் போலிருந்தது.

சுவிட்ச் போட்டது போல் பரபரப்பாய் இயங்கும் மனிதர்கள்...கருப்பு புகையை கக்கிச் செல்லும் வாகனங்கள், மற்றவர்கள் பார்ப்பார்களே என்ற அச்சம் சிறிதுமின்றி பைக்கில் ஆணின் முதுகோடு பசைபோல், பல்லிபோல், ஒட்டிக்கொண்டு, ஷாம்பூவில் பளபளத்த கேசம் பறந்தபடி செல்லும் யுவதிகள், சர்புர்ரென்று கண்ணிமைக்கும் நேரத்தில் கடந்து செல்லும் வாகனங்களை

அதனிடையே சாமர்த்தியமாய் ரோட்டை கடக்கும் எந்திர மனிதர்களையும் பார்க்கும்போது ஒரு பயம் புதிதாய் முளைத்தது.

நானும் இவர்களைப் போல்தான் இப்படி நடு ரோட்டில் ஓடவேண்டும். என்னால் முடியுமா? பஸ்ஸோ, லாரியோ என்மீது மோதிவிட்டால் என்னாவது? அப்புறம் என் குடும்பத்தை யார் காப்பாற்றுவது? வியர்த்தது காவ்யாவிற்கு.

'சென்னையில் குப்பைக் கொட்டுவது அவ்வளவு எளிதான வேலையில்ல' என்பதை உணர்ந்தாள்.

கார் அந்த பெரிய பங்களாவினுள் நுழைந்து போர்டிகோவில் தஞ்சமடைந்தது.

காரை விட்டிறங்கிய காவ்யா அந்த பங்களாவைப் பார்த்து பிரம்பின் உச்சத்திற்கே சென்றாள். இதுவரை சினிமாவிலும், டிவியிலும் தான் இந்த மாதிரி அழகான பங்களாவை பார்த்திருக்கிறாள். சுவற்றிலெல்லாம் மார்பிள் பொருத்தப்பட்டு பளபளத்தது. போர்டிகோவில் நாலைந்து கார் இருந்தது. பங்களாவை சுற்றிலும் தோட்டம் இருந்தது. அதன் நடுவில் நீச்சல் குளம் கூட இருந்தது.

அந்த வீட்டிற்கு வருவது இதுதான் முதல்முறை. புருஷோத்தமன் அங்கிள் பணக்காரர் என்பதை அறிவாள். ஆனால், இவ்வளவு பெரிய பணக்காரராய் இருப்பார் என்று கனவிலும் நினைக்கவில்லை.

"என்ன கண்ணப்பன்... பார்த்துக்கிட்டே நிக்கறீங்க! பெட்டிய எடுத்துக்கிட்டு உள்ளே கொண்டுபோய் வைங்க!" என்று உத்தரவிட்டார் புருஷோத்தமன்.

கண்ணப்பன் என்று அழைக்கப்பட்டவன் அந்த வீட்டு பணியாள் போலும். இவரைக் கண்டதும் துண்டை இடுப்பில் கட்டி பவ்யமாய் நின்றிருந்தான்.

"ஐயா... இதோ வந்துட்டேங்க!" என்றபடி காவ்யாவின் பெட்டிகளை எடுத்துச் சென்றான்.

"யாருது பெட்டி?" என்று கேட்டாள் எதிர்ப்பட்ட மனோன்மணி! சமையல்கார பெண்மணி மட்டுமல்ல கண்ணப்பனின் மனைவியும் கூட...

"அடி மனோ...ஐயா... ராசாத்தி மாதிரி ஒரு பொண்ணை அழைச்சிட்டு வந்திருக்கார். இந்த வீட்டுக்கு மருமகளா வரப்போறவ போலிருக்கு. எம்புட்டு அழகாயிருக்கு தெரியுமா? நம்ம சின்னைய்யாவுக்கு ஏத்த ஜோடி!" என்றான் தன் அனுமானப்படி.

"அட... நெசமாவா?" மனோன்மணி அந்தப் பெண்ணை பார்க்கும் ஆசையில் வாசலுக்கு ஓடினாள்.

இவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த அகிலா அடிப்போனாள்.

"ஏய் மனோ... இங்கே என்ன பேச்சு? போய் வேலையைப் பார்!"

"அம்மா... யாரோ ஒரு பொண்ணு!"



"எல்லாம் தெரியும். நீ உள்ளே போ! கண்ணப்பா... இந்த பெட்டிகளை அதோ... அந்த கடைசி ரூமில் போய் வை! அப்படியே அந்த ரூமை கொஞ்சம் க்ளீன் பண்ணிடு!" உத்தரவிட்டு விட்டு வெளியே வந்தாள்.

பிரமிப்புடன் சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டிருந்த காவ்யாவைக் கண்டதும் உள்ளுக்குள் எரிச்சல் மண்டியது.

"வா... வாம்மா காவ்யா!" என்றாள் முகத்தில் வரிய ஒரு புன்னகையை ஒட்ட வைத்து.

"நல்லாருக்கீங்களா அத்தை?" என்றாள் முகம் மலர.

"எப்படி நல்லாயிருக்க முடியும்? உங்க மாமா சில சமயம் என்னைக்கேக்காம கொள்ளாம அசட்டுத்தனமாக காரியம் பண்ணி... வேலியிலே போற ஓணானை பிடிச்சு காதுக்குள்ளே விட்டுக்கறார். எடுத்து சொன்னாலும் புரிஞ்சுக்கறதில்லே. இதனாலேயே பிரச்னைகள் உண்டாகுது!"



## ஹைக்கூ

*யார் பயமுறுத்தியது!*
*படுத்த படுக்கையில்*
*கோடாங்கி!*

-முகவை முனீஸ்.

"ஏன் அங்கிள்... அத்தைய மனம் வேதனைக்குள்ளாக்கறீங்க?"

"அவ சொல்றதை பெரிசா எடுத்துக்காதே! நான் பண்ற நல்ல காரியங்களை கறுப்பு கண்ணாடி போட்டுக்கிட்டு பார்த்தா... அவ கண்ணுக்கு கறுப்பா தெரியுது. அதுக்கு நான் என்னம்மா பண்ண முடியும்? வீணா தன்னையும் குழப்பி மத்தவங்களையும் குழப்பறதிலே உங்க அத்தையை மிஞ்ச ஆளே இல்லே! ஓணான் பிடிக்கிற வம்சம் எங்க வம்சமில்லேன்னு புரிய வைக்கறதுக்கு அந்த ஆண்டவன்தான் ஒரு வழியை காட்டணும். சரி...சரி... எவ்வளவு நேரம் தான் வாசல்லேயே நின்னு பேசுவே! உள்ளே வா... போகலாம்!" என்றார் புருஷோத்தமன்.



## 5

ஆரம்பத்தில் அந்த பங்களாவையும்,

ஆடம்பர வசதிகளையும் பார்த்து பிரமித்து வாய்பிளந்தவள் போகப் போக பழகிக் கொண்டாள். எனினும் ஹீட்டர் போட்டு வெந்நீரிலோ, பாத்டப்பிலோ படுத்து குளிக்க அவள் மனம் ஒப்பவில்லை. நெஞ்சு வரை பாவாடையை தூக்கிக்கட்டிக் கொண்டு பக்கெட்டில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு ஜக்கில் மொண்டு குளித்தாள்.

அவளுக்கு ஒதுக்கியிருந்த அறையிலும் ஏஸி இருந்தது. என்றாலும் அதை அவள் உபயோகிக்கவில்லை.

அவளை பிடிக்காவிட்டாலும், கணவருக்கு பயந்து அடக்கி வாசித்தாள் அகிலா. எனினும் காவ்யா வலியப் போய் அத்தையிடம் பேசும் போதெல்லாம், கைவலி, கால்வலி என்று கண்களை மூடிக்கொள்வாள். உடனே காவ்யா அவளுக்கு கால்பிடித்து விட அமர்ந்து விடுவாள்.

அந்த பங்களாவில் ஆடம்பரம் மிக்க பொருட்கள் அதிகமாகவே இருந்தன. அவை இருக்க வேண்டிய இடத்தில் இருந்தன. சந்தனத்தில் இழைக்கப்பட்ட மீரா சிலை, ராதாகிருஷ்ணன் சிலை, தாஜ்மஹால் என அங்கங்கு சிறிய ஸ்டூல்களில் வைக்கப்பட்டிருந்தது. சுவற்றில் நான்கைந்து மாடர்ன் ஆர்ட் ஓவியங்கள் மாட்டப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் பத்தாயிரம், பதினைந்தாயிரம் மதிப்புள்ளவை. ஏலத்தில் எடுக்கப்பட்டவை என அங்கிள் சொன்னபோது வாயடைத்துப் போனாள் காவ்யா.

இந்த வீட்டின் ஒவ்வொரு அடியும் பணத்தால் பாலீஷ் செய்து வைத்திருக்கும் போது– இவர்களின் ஒரே பிள்ளை ரகுவர்மனை எப்படி வைத்திருப்பார்கள்? ஆமாம்– இந்த வீட்டில் மருந்துக்கூட அவன் போட்டோ ஒன்றுகூட காணோமே! மாமா அத்தை இணைந்த போட்டோ ஒன்றை வரவேற்பறையைத் தாண்டிய உள்ளறையில் மாட்டப்பட்டிருப்பதை பார்த்தாள்.

ரகுவின் போட்டோவைத் தான் காணோம்! ஆவலை அடக்கமாட்டாமல் மனோன்மணியிடம் கேட்டே விட்டாள். மனோன்மணி அவளை குசும்புடன் பார்த்தாள்.

"ஏங்கண்ணு... மாமன் முகத்தை பார்க்கணும்னு அம்புட்டு ஆசையா?"

"ஐயோ– அப்ப்டியெல்லாம் இல்லீங்க!"

"ஏங்கண்ணு வெக்கப்படறே? உனக்கில்லாத உரிமையா? நானும் உன் வயசைத் தாண்டி வந்தவள்தான். ரகுதம்பியோட போட்டோ அவரோட ரூம்ல இருக்கு. சும்மா சொல்லக்கூடாது. உனக்கேத்த ராஜகுமாரன் தான்!"

காவ்யாவின் முகம் சிவந்துப் போயிற்று.

'தான் யார், எதற்காக் வந்திருக்கிறோம் என்று தெரியாமல் அநாவசியமாய் கற்பனை செய்து பேசுகிறாளே' என்று சங்கடப்பட்டாலும் 'உனக்கேத்த ராஜகுமாரன் தான்' என்ற



மனோன்மணியின் வார்த்தைகள் அவளுக் சிலிர்ப்பை ஏற்படுத்தியதென்னவோ நிஜம்தான். ஆனால் அதெல்லாம் கணநேரம்தான். இதென்ன வேண்டாத சிந்தனை?' என்று தன்னைத்தானே சுதாரித்துக் கொண்டு மற்ற வேலைகளில் கவனத்தைப் பதித்தாள்.

அவள் அங்கு வந்து ஒருவராமாகியும் ரகுவ்ர்மன் வரவில்லை. சென்ற பணி முடிவடையாததால் சென்னை வர தாமதமாகும் என்று போன் பண்ணியிருந்தான்.

ஒருவேலையும் இன்றி சும்மாவே வேளாவேளைக்கு சாப்பிட்டு விட்டு வளையவர அவளுக்கு ஒருமாதிரியாக இருக்கவே அங்கிளிடம் வினாவினாள்.

"என்ன இப்ப? நல்லா சாப்பிட்டு ரெஸ்ட் எடு!

ரகு ஊருக்கு வந்தபிறகுதான் நீ ஆபீஸ்க்கு போக முடியும்!" என்றுகூறிவிட்டார்.



ஹைக்கூ

இருண்ட கிராமத்தின் வழியே
இரக்கமின்றி செல்கின்றன...
நகரத்திற்கு மின் கம்பிகள்

-நாவம்மா முருகன்.

சும்மாயிருக்கப் பிடிக்காமல் வலிய வேலைகளில் ஈடுபட்டாள். ஜன்னல் கதவுகளை சுத்தம் செய்து திரைச்சீலைகளை மாற்றினாள். அத்தை மாமாவை அமர வைத்து தானே பறிமாறினாள். தோட்ட வேலைகளில் ஈடுபட்டாள். தண்ணீர் பாய்ச்சினாள்.

"என்னம்மா இது? உனக்கேன் இந்த வேலை எல்லாம்?" என்று புருஷோத்தமன் செல்லமாய் கடிந்துக் கொண்டார்.

"போரடிக்குது அங்கிள்! இதைவிட கடினமான வேலை எல்லாம் செய்திருக்கிறேன். அதனால் இதெல்லாம் எனக்கு சிரமமாய் தெரியவில்லை. தடுக்காதீர்கள் ப்ளீஸ்!" என்றபோது அவரால் ஒன்றும் செய்ய முடியாமல், "எப்படியோ போ!" என்று தலையில் லேசாய் குட்டிவிட்டுப் போய்விட்டார்.

***

உள்ளே நுழைந்த ரகுவர்மனுக்கு கூர்க்கா அவசர அவசரமாய் சலாம் வைத்ததை... ஒருதலையசைப்போடு ஏற்றுக் கொண்டு உள்ளே சென்றான்.

டாமியும், ஜூலியும் இவனைப் பார்த்ததும் உற்சாகத்தில் துள்ளி.. வவ்..வவ்.. என்று விசுவாசத்தோடு நலம் விசாரித்தது. ரகு அவற்றின் அருகில் சென்று தலையை கோதி விட்டான்.

அப்போதுதான் அவளைப் பார்த்தான். விழிகள் வியப்பில் அகன்றன.

காய்ந்த சருகுகளை ஒரு கூடையில் அள்ளிப்போட்டுக் கொண்டிருந்த காவ்யாவை.

'யாரிவள்? புதிதாய் வேலைக்கு சேர்ந்திருக்கிறாளா? இவளா? வீட்டுவேலைக்கா? டீன் ஏஜில் மறுத்தது. இருக்கும் இவளா?' ரகுவின் மனம் ஏற்க மறுத்தது.

ரகு எழுந்து அவளருகே சென்றான்.

"ஹலோ...!" என்றான்.

புத்தம் புதிய ஆணின் குரல்கேட்டு சடாரெனத் திரும்பினாள் காவ்யா.

அழகான இளைஞன். பயணத்தால் கலைந்திருந்த தலையும், களைத்திருந்த முகமும் அவன் வசீகரத்தை குறைத்துக் காட்ட... காவ்யா திகைப்பாய் பார்த்தாள்.

"ஹலோ.. யார் வேணும் உங்களுக்கு?" பேச்சில் கிராமத்து வெகுளித்தனம் வெளிப்பட்டது. கொஞ்சம் அவளிடம் விளையாடிப் பார்க்க ஆவல் ஏற்பட்டது.

"மிஸ்டர் ரகுவர்மன் இருக்காரா?"

"இல்லேங்க.. அவர் வெளியூர் போயிருக்கார். எப்ப வருவார்னு சொல்ல முடியாது. சரி.. நீங்க யாரு?"

"அதிருக்கட்டும்.. நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?"

காவ்யாவுக்கு கோபம் விஷம் போல் ஏறியது.

"அவசியமில்லே! பார்த்தா படிச்சவர் மாதிரி இருக்கீங்க. ஒரு பெண்ணிடம் எப்படி பேசணும்னு கூட தெரியாதா?"

"ஏங்க.. நான் இப்ப என்ன தப்பா பேசிட்டேன்னு பினாத்தறீங்க?"

"பினாத்தறேன், கினாத்தறேன்னு அநாகரிகமாக பேசாதீங்க. இந்த வீட்டுக்கு வந்து ரகுவர்மன் இருக்காரான்னு கேட்டது நீங்க! அவர் வந்தா, இன்னார் உங்களைத் தேடிக்கிட்டு வந்தார்னு விஷயம் தெரியப்படுத்தணும்னா.. உங்க பேரை சொல்றது தான் நாகரிகம். அதை விட்டுட்டு என்பேர் என்னன்னு கேக்கறது அநாகரீகம்."

"மொகஞ்சதாரோ, ஹரப்பா உருவாகின காலத்திலே பிறந்து வளர்ந்தவங்க போல.. ரொம்ப அழகா நாகரீகம் பத்தி லெக்சர் அடிக்கறீங்க!"

"மிஸ்டர்.. என்ன பேச்சு இது?"

"நான் அப்படித்தான் பேசுவேன்!"

"என்ன.. என்ன.. அப்படித்தான் பேசுவீங்க்ளா?

கூர்க்கா.. கூர்க்கா.. உள்ளே போய் ஐயாவை கூப்பிடு மொதல்ல!"





டென்ஷனில் கத்தினாள் காவ்யா முகம் வியர்த்திருந்தது.

அதற்குள் புருஷோத்தமனே வந்து விட்டிருந்தார்.

"அடடே ரகு வந்திட்டியா? இங்கே என்னப்பா பண்ணிட்டிருக்கே? நேரே உள்ள வராம?"

"இப்பதான் டாடி வந்தேன். ஆமா யாரிந்த வாயாடி?"

காவ்யாவின் கைகாலெல்லாம் நடுக்கத்தில் வெடவெடத்தது.

'இவரா ரகு? இவரிடமா சண்டை போட்டேன்?

ஐயோ கடவுளே!'

" சீர்காழியில இருக்காளே உன்னோட அத்தை! அவளோட பெரிய பொண்ணு காவ்யா!"

"காவ்யாவா? அவளா இது? இவ்ளோ பெரிசா வளர்ந்துட்டா?"

"நீ கூடத்தான் அவளை பார்க்கறப்ப டிராயர் போட்டுட்டு இருந்தே! இப்ப வளர்ந்து பெரிசா நிக்கறியே...!"



## ஹைக்கூ

விபூதி மடித்த
காகிதத்தில்
மஞ்சதி படம்!

-எஸ்.அடுமை.

காவ்யா தலையை குனிந்தவள்... குனிந்தவள்தான்.

'ஏன்... என்னிடம் பொய் சொன்னான்? நான்தான் ரகு என்று சொல்லியிருக்கலாமே! நானும் அநியாயத்துக்கு சண்டை போட்டு விட்டேனே! என்னைப்பற்றி தவறாக அல்லவா நினைத்து விட்டார் ச்சே.... அவ்சரபுத்திக்காரி நான்!' தன்னைத்தானே நொந்துக் கொண்டாள்.

"டாடி கொஞ்ச நேரம் முன்னாடி வந்திருக்கணும் நீங்க.. என்கிட்டே இவ எப்படி சண்டை போட்டாத் தெரியுமா?"

"இல்லே அங்கிள்.. எனக்கு யாருன்னு தெரியலே.. ஸாரி.." என்றாள் அவசரமாக.

"விடும்மா! எனக்குத் தெரியும் ரகுவைப்பத்தி! அழகான பொண்ணை பார்த்ததும் விளையாட தோன்றியிருக்கும் விளையாடிருப்பான்."

"ஆமா.. என்ன திடீர்னு நம்ம வீட்டுக்கு காவ்யா விஜயம்?"

"சொல்றேன் முதல்ல உள்ளே வா!"



"அட... ரகு எப்பப்பா வந்தே?" உள்ளிருந்து வந்தாள் அகிலா. "நான் வந்து அரைமணி நேரமாச்சு!"

"இவ்ளோநேரமா உள்ளே வராம 'இங்கே என்ன பண்ணிட்டிருந்தே?" அகிலா சந்தேகத்துடன் கேட்டாள்.

"என் அத்தைப் பொண்ணு கூட விளையாடிட்டிருந்தேன்!" என்றான் சிரித்தபடி காவ்யாவை பார்த்து.

வானத்திலிருந்து எரிகல் ஒன்று நேரா தன் தலையில் விழுந்ததுபோலிருந்தது அகிலாவிற்கு.

அன்றுதான் முதன் முதலாக அலுவலகம் செல்கிறாள் காவ்யா! மனத்திற்குள்ளாக அப்பாவை நெஞ்சில் நிறுத்தி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டாள்.

மாமா அத்தையை நிற்கவைத்து காலில் விழுந்து வணங்கினாள்.

"நல்லாயிருப்பே... எந்திரிம்மா!" என்று மனதார வாழ்த்தினார் புருஷோத்தமன்.

'நல்லா வசியம் பண்ண கத்துக்கிட்டிருக்கா! ஆனா, எந்த வசியமும் இங்கே எடுபடாது.. நான் உயிரோடு இருக்கிறவரைக்கும்' என்று கறுவிக் கொண்டாள்.

ரகுவர்மன் காரில் அமர்ந்தபடி இவளுக்காக காத்திருந்தான். அவன் எப்போதும் செல்ஃப் டிரைவிங்தான். பெற்றவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் டிரைவர் வைத்துக் கொள்ள மறுத்து விட்டான்.

"சீக்கரம் வா காவ்யா... டைமாகுது!" என்றான் ரகு.

"நீங்க கிளம்புங்க!"

"நீ கார்ல உக்கார்ந்தாதானே கிளம்ப முடியும்?"

"ஐயோ... கார்லேயா? நான் வரலே!"

"ஏன்....?"

"இல்லே......அது சரிப்பட்டு வராது. நீங்க என் முதலாளி, நான் தொழிலாளி! நான் உங்களோட கார்ல வர்றது மரியாதையில்லே!"

"அட... என்னம்மா நீ வீணா வசனம் பேசிக்கிட்டு? ஏறி உட்கார்!"

"இல்லே அங்கிள். உங்க பேச்சை மீறதுக்காக மன்னிக்கணும். என் முதலாளிக்கு நான் தர்ற மரியாதையை யாரும் தடுக்காதீங்க! தவிர, இந்த வசதிகள் எல்லாம் எனக்கு புதுசு. பழகிட்டா.. மனசு அடிமைப் பட்டு போகும்".

"வேதாந்தி மாதிரியே பேசறா டாடி! இவளை ஆபீஸ்ல வச்சுக்கிட்டு 'நான் எப்படித்தான் குப்பைக் கொட்டப் போகிறேனோ? இப்ப ஏறப்போறியா, இல்லையா?"

"அவதான் வரமாட்டேன்னு சொல்றாளே!`சும்மா என்ன கெஞ்சிக்கிட்டு. அவ சொல்றதும் சரிதானே? முதலாளியும், தொழிலாளியும் எப்பவும் சமமாக முடியாது. சூர் சவாரியும், மாட்டு வண்டி சவாரியும் ஒண்ணாக முடியாதுன்னு * காவ்யா புரிஞ்சுக்கிட்ட அளவுக்கு கூட அப்பாவுக்கும், பிள்ளைக்கும் புரியலையே! நீ கிளம்பும்மா காவ்யா....! என்றாள் அகிலா.

புருஷோத்தமன் மனைவியை முறைக்க.. அவள் அதை அசட்டை செய்து உள்ளே போய் விட்டாள். காவ்யாவும் வெளியேற.. ரகுவின் காரும் சீறிப் பாய்ந்து புறப்பட்டது. புருஷோத்தமன் யோசனையுடன் சற்றுநேரம் அங்கேயே நின்றிருந்தார்.

***



ஹைக்கூ

வேருமில்லை விழுதுமில்லை
முளைத்தது எப்படி?
கொடி மரமே!

-இரா.சக்திவேல்.

"வெரிகுட்...வெரிகுட்!" என்று அவளை வெகுவாய் பாராட்டினான் ரகுவர்மன்.

காவ்யா சந்தோஷம் கலந்த வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

"ரொம்ப ஆச்சர்யமாயிருக்கு! உன்னோட வொர்க்கை பார்க்கிறப்ப..ஏழெட்டு வருஷம் எக்ஸ்பீரியன்ஸ் உள்ள லேடி போல பர்ஃபெக்ஷன் இருக்கு! கீப் இட் அப்!"

ஆரம்பத்தில் அந்த பந்தாவான அலுவலகம் பார்த்து திகைத்தது நிஜம். அங்கு வேலை செய்யும் ஆண்களும் பெண்களும் பிரமிப்பை ஏற்படுத்தினர். உடையிலும், பேசும் விதத்திலும்.

ரகு தன் காரியதரிசி மூலம் அவளுக்கு அந்த ஆபீஸ் வொர்க்கை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தான். காவ்யாவும் கற்பூரம் போல கப்பென சொல்லிக் கொடுத்ததை பற்றிக் கொண்டாள். அதைத்தான் பாராட்டினான் ரகு.

'அப்பா இருந்தால்... எவ்வளவு சந்தோஷப்படுவார்?'

காவ்யாவின் கண்கள் சட்டென கலங்கியது.

அதைப் பார்த்த ரகு துணுக்குற்றான். அவள் மனதை முகம் வெளிப்படுத்த... புரிந்துக் கொண்ட ரகு பரிதாபப்பட்டான். ஒரு முடிவுக்கும் வந்தான்.





## 6

காவ்யா மறுக்க மறுக்க, விடாப்பிடியாய் அவளை காரில் ஏற்றிக் கொண்டு நகரின் உயர்தர ரெஸ்ட்டாரெண்டிற்கு அழைத்துச் சென்றான் ரகு.

இந்த மாதிரி இடத்திற்கெல்லாம் அவள் வந்திராததால் கூச்சம் பிடுங்கித்தின்றது.

ஒவ்வொரு டேபிளிலும் ஜோடி, ஜோடியாய் அமர்ந்திருந்த யுவன்களும், யுவதிகளும் சுற்றுப்புறம் மறந்து.. அந்த இடத்தில் தங்களிருவரைத்தவிர யாருமில்லை என்கிறாற்போல் தோளோடு இழைந்து, சிரித்துப்பேசி... ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொண்டு லஜ்ஜையின்றி நடந்துக் கொண்ட விதம் அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

"என்ன காவ்யா..ஏன் ஒரு மாதிரி நெளியறே?"

"ஒ... ஒண்ணுமில்லையே!"

"இந்த இடம் உனக்கு சங்கடமாயிருக்கா?"

"ம்!" என்று தலையாட்டினாள் நிமிராமலேயே.

"உன்னை நிறைய மாத்தவேண்டியிருக்கு. நீ மாறணும்!"

"...........?!"

"இந்த ஊரிலே லேடீஸூம், ஜெண்ட்ஸூம் கொஞ்சம் கூட வெட்கமில்லாம பப்ளிக்லேயே லவ் பண்றாங்களேன்னு நினைக்கிறேதானே?"

'இவனுக்கு எப்படி என் மனதில் இருப்பது தெரியும்? என்பதுபோல் ஆச்சர்யமாய் அவனைப் பார்த்தாள்.

"என்ன பண்றது காவ்யா! இவங்களை சொல்லியும் தப்பில்லே! மனசுக்கு பிடிச்சவங்களை நேசிக்கிறது தப்பா என்ன? ஆனா, மனசு விட்டு பேசிக்க இங்கே இடமில்லை! பார்க், பீச், வள்ளுவர் கோட்டம், வண்டலூர், ரவுண்டானான்னு... இப்படி எல்லா இடத்திலேயும் லவர்ஸை அலவ் பண்றதில்லே! பாவம்... எங்கேதான் பேசறது? அதனாலதான் இந்த மாதிரியான ரெஸ்ட்டாரெண்ட்டுக்கு வந்து லவ் பண்றாங்க. உங்க ஊர்ல மட்டுமென்ன, வயல்வெளி, பம்ப்செட்டுன்னு ஓப்பன் ப்ளேஸ்தானே லவர்ஸ் மீட் பண்றாங்க?" காவ்யா 'களுக்'கென சிரித்தாள்.

"ஒன்ஸ்மோர் ப்ளீஸ்!"

"எ... என்னது?" புரியாமல் பார்த்தாள்.

"மறுபடியும் ஒருமுறை சிரின்னு சொன்னேன். நீ சிரிக்கும் போது... இன்னும் அழகாயிருக்கே.. ஐ லைக் இட்!" என்றான், இமைக்காமல் அவளையேப் பார்த்தபடி.

அந்த வார்த்தை காவ்யாவை எங்கோ தூக்கியடித்தது. உடல் முழுக்க காய்ச்சல் போல் சூடு பரவியது. கைகள் லேசாய் நடுங்குவதை உணர்ந்தாள். இதயம் வேகவேகமாய் துடித்தது.

"நல்லா சாப்பிடு காவ்யா! உன் உயரத்துக்கு இன்னும் கொஞ்சம் வெய்ட் போட்டாதான் நல்லா இருக்கும். எனக்கு பலப்பம் மாதிரி குச்சி குச்சியா இருக்கிற பெண்களைப் பார்த்தாலே பிடிக்காது. ஸ்பூன்லதான் எடுத்து சாப்பிடணும்னு இல்லே. அன் ஈஸியா இருந்தா.. கஷ்டப்படாதே! கையாலேயே எடுத்து சாப்பிடு!" என்றான் அன்பாய்.

காவ்யாவின் ஈரமனசுக்குள் விதையொன்று விழுந்தது.

"சேலையும், சுடிதாரும் தவிர வேறெதுவும் பிடிக்காதா உனக்கு? அங்கேப் பார்.. அந்தப் பொண்ணு உன் அழகில பாதிக்கூட இல்லே. கலரும் கம்மிதான். ஆனா, அவளோட ஹேர் ஸ்டைலும், டிரஸ்ஸும் தேவதை மாதிரி காட்டலே? நீயும் ஹேர் ஸ்டைல் பண்ணிக்க. வழவழன்னு தலை நிறைய எண்ணெய் வச்சுக்கிட்டு வராதே! அவளை மாதிரி ஜீன்ஸ்தான் போடணும்னு சொல்ல மாட்டேன். புட், நீ போடற சுடிதாரெல்லாம் அவுட் ஆஃப் ஃபேஷன். இப்ப நாம நேரே.. நாயுடு ஹாலுக்கு போறோம். விதவிதமா டிரஸ் வாங்கறோம்.!"

"ஐயோ...அதெல்லாம் எதுக்கு?"

"நீ உடுத்திக்கத்தான்! தடுக்காதே காவ்யா! நீ மாறணும், உன் மனசுல உள்ள துக்கம் மறையணும். சியர் அப் காவ்யா! எப்பவும் அப்பாவையே நினைச்சிட்டிருக்காதே! ஒக்கே! உன்னை இதே சிரிப்போட சந்தோஷத்தோட நான் எப்பவும் பார்க்கணும்."

அவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் காவ்யாவை அசைத்துப் பார்த்தன. தடுமாறிப் போனாள். அவன் அவள் மீது செலுத்திய அன்பையும், அக்கறையையும் காதல் முலாம் பூசி அர்த்தம் எடுத்துக் கொண்டாள்.



## ஹைக்கூ

*பள்ளி மணி அடித்துவிட்டது.*
*மகன் வருவான் சாப்பிட...*
*மாடு மேய்த்துவிட்டு.*

-இரா.அ.தென்றல் நிலவன்.

***



முதல் மாத சம்பளம் அவள் கைக்கு வந்தபோது காவ்யா இந்த உலகத்திலேயே இல்லை. இறக்கை கட்டி பறந்தாள். தன் சொந்த உழைப்பால் சம்பாதித்த பணம். இந்த பணம்தான் தன் குடும்பத்தை காப்பாற்ற போகிறது என்கிற பெருமிதம்... அப்பா ஆனந்தக் கண்ணீர் பொங்க அவள் தலையை வருடிக் கொடுத்தது போல் சிலிர்த்துப் போனாள்.

தனக்கென்று ஒரு சிறு தொகையை வைத்துக் கொண்டு மற்றதையெல்லாம் ஊருக்கு அனுப்பி வைத்தாள்.

இப்போதெல்லாம் அவளால் ரகுவின் முகம் பார்த்து பேச முடியவில்லை. அவனின் விளையாட்டுத்தனமான பேச்சும் சீண்டலும், அவளுள் விழுந்திருந்த காதல் விதையை முளைவிட்டு வளர வைத்து விட்டது.

தன் மகன் அவளிடம் சிரிக்க சிரிக்க பேசுகிறானே என்று அகிலா வயிறெரிந்தாள். தோள் மிஞ்சி வளர்ந்தப் பிள்ளையை பேசாதே. சிரிக்காதே என்று அதட்ட முடியுமா? அம்மாவைப் பற்றி என்ன நினைப்பான்?

புருஷோத்தமன் இதைப்பற்றி கண்டு கொள்ளவே இல்லை. அவருக்கு ஃபேக்டரி வேலையை கவனிக்கவே நேரம் சரியாய் இருந்தது.

காவ்யா தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் கூடுதல் நேரத்தை ஒதுக்கினாள்.. தலைக்கு வழிய வழிய எண்ணெய் ஊற்றி தேய்ப்பதெல்லாம் மறந்துப் போனாள். தினமும் ஷாம்பூ குளியல்தான். கண்ணாடி முன் நின்றால்... தன்னை மறந்துப் போவது வாடிக்கையாகிவிட்டது.

"ஒன்ஸ்மோர் ப்ளீஸ்..."

"நீ சிரிக்கும்போது இன்னும் அழகாயிருக்கே! ஐ.. லைக் இட்!"

"ஐ லைக் இட்...ஐ லைக் இட்!" அந்த வார்த்தைகள் அவளை ஆட்டிப் படைத்தன. கண்ணாடியில் தெரிந்த தன் சிரித்த முகத்தைக் கண்டு பூரித்துப் போவாள்.

'இந்த முகம்தானே ரகுவைக் கவர்ந்தது?' தொட்டுப் பார்த்து பெருமை கொள்வாள்.

'நிஜம் தான்... நான் அழகாத்தான் இருக்கிறேன்.!

ரகுவைப் பற்றிய நினைவும், அவன் மீது எழுந்திருந்த காதலும் அவள் மேனியை பூரிக்கச் செய்து ஒரு மினு மினுப்பை உற்பத்தி செய்திருந்தது.

கடிகாரத்தில் மணி ஒன்பதடித்தது.

திடுக்கிட்டுப் பார்த்தவள் கையை உதறிக்கொண்டாள்

'அடடா...ஆபீஸ்க்கு நேரமாயடுச்சே!'

அவசர அவசரமாய் டிரஸ்ஸிங் டேபிள் மீதிருந்த ஹேண்ட் பேகை எடுத்து மாட்டிக்கொண்டவள் கண்களில் அந்தக் கடிதம் பட்டது.



## ஹைக்கூ

நெடுநேரமாய் பேசும்
நண்பன்
போகும்போது கேட்பானோ...
கடன்–

-இரா.அ.தென்றல் நிலவன்

மஞ்சள் நிற போஸ்ட் கவர்! மூன்று நாட்களுக்கு முன்பு.... சங்கரிடமிருந்து வந்த கடிதம். பிறகு படித்துக் கொள்ளலாம்... என்று தினமும் அதை தொடாமால் சென்று விட்டாள்.

'என்னைப் பிரித்து தான் பாரேன்!' என்று பரிதாபமாய் பார்த்த கவரை பெரிய மனதுடன் எடுத்துப் பிரித்தாள்.

'என் அன்பிற்கினிய காவ்யாவிற்கு!

நானும் அம்மாவும் நலம்! உன் நலமறிய ஆவல். நீ இல்லாத இந்த சீர்காழி....சிக்கு . பிடித்தாற் போலிருக்கிறது. உடம்பை கவனித்துக் கொள். சென்னையின் அசுத்தமான காற்றும், தண்ணீரும் உன் உடம்பை தாக்கிவிடப் போகிறது.

சென்னை உனக்கு பிடித்திருக்கிறதா? அந்த ஊரோ, வேலையோ பிடிக்காவிட்டால், 'தைரியமாய் உதறி விட்டு ஊருக்கு புறப்பட்டு வா!"

அதற்குமேல் அந்த கடிதத்தை படிக்கப் பிடிக்காமல் பாதியிலேயே மூடி கவரில் போட்டு விட்டு வெளியே வந்தாள்.

'இந்த ஊரை, வேலையை உதறிவிட்டு வருவதா? முட்டாள் தனமான ஐடியா! என் உயிரை இங்கே உதறி எறிந்து விட்டு... நான் ஊருக்குச் செல்வதா? கிண்டலாய் சிரித்தபடி...நன்டயை எட்டிப்போட்டாள்.

***

அகிலா இரவு உணவை அனைவருக்கும் பரிமாற... கண்ணப்பனும், மனோன்மணியும் அவளுக்கு உதவி செய்துக் கொண்டிருந்தனர்.

அலுவலக பணிகள் குறித்து' பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர் தந்தையும் மகனும்.

"காவ்யா எப்படி... தேறிட்டாளா ரகு?"

"தேறிட்டாளாவா? எனக்கே கத்துக்குடுக்கிற அளவுக்கு பிக்கப்



ஆயிட்டா டாடி! ஆச்சர்யமாகத்தான் இருக்கு! எக்ஸ்பீரியன்ஸ் உள்ள வங்களேக்கூட புதுசா ஒரு ஆபீஸ்குள்ளே நுழையறப்ப தடுமாறிப் போய்டுவாங்க. அந்த வேலையோட ஒன்றிப்போக பல மாதங்கள் எடுத்துப்பராங்க. ஆனா,நம்ம காவ்யா... வெரி...வெரி...பிரில்லியண்ட் கேர்ள் டாடி!"

புருஷோத்தமன் அவனின் புகழ்ச்சியைக் கேட்டு சிரித்தபடி மனைவியை கடைக்கண்ணால் ஏறிட்டார்.

அகிலா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"காவ்யா எங்கே? நம்மளோட சேர்ந்து சாப்பிடலாமில்லே? மனோ... காவ்யாவை நான் வரச்சொன்னேன்னு கூப்பிடு!" என்றான் ரகு.

"அதெல்லாம் வெண்டாம்! இந்த வீட்லே ஆம்பளைங்க சாப்பிட்ட பிறகுதான் பொம்பளைங்க சாப்பிடணும். அதை காவ்யாவும் உணர்ந்ததாலதான்... எப்பவும் உங்களுக்கு பிறகு சாப்பிடறா! இப்ப என்ன பழக்கத்தை மாத்தறே? அவ அப்புறம் சாப்பிடுவா... நீ சாப்பிடு!" என்றாள் இடைமறித்து.

புருஷோத்தமன் அதற்கும் சிரித்துக் கொண்டார்.

அதே நேரம் போன் அலறியது.

"இது வேற... நேரம் காலம் தெரியாம அலறும்"

என்று சலித்தபடி ரிசிவரை எடுத்த அகிலாவின் முகம் அடுத்த கணமே மலர்ந்தது.

"ப்ரியா...நீயா?"

## 7



அகிலா... அங்குமிங்குமாய் பரபரப்புடன் நடந்து கொண்டிருந்தாள்.

அவளை விட அதிகமாய் ரகுவர்மன் பரபரப்புடன் காணப்பட்டான்.

காரணம்...ப்ரியாவின் வருகை!

சென்ற வாரம் மலேஷியாவிலிருந்து பேசிய ப்ரியா... தான் இந்தியா வரப்போவதை தெரியப்படுத்திய உடன் வானத்திற்கும் பூமிக்குமாய் குதித்தாள். காவ்யாவினால் கலவரப்பட்டிருந்த அவள் மனம்... ப்ரியா வரப்போவதை அறிந்து அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற வேட்பாளரைப் போல் குளிர்ந்துப் போனாள் அகிலா.

ப்ரியா வேறு யாருமில்ல! அகிலாவின் சொந்த அண்ணன் மகள் தான! அவள் வரப்போவதையறிந்து புருஷோத்தமன் வழக்கம் போல் அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால் ரகுவினுள் உற்சாக நீரூற்று பொங்கி அவன் இதயத்தை குளிர்வித்தது.

பின்னே...? வரப்போகிறவள் அவனின் காதல் தேவதையல்லவா?

ஆனாலும் அவனுள் ஒரு சின்ன நெருடல்!

ப்ரியா அம்மாவிடம் பேசினாள். அப்பாவிடம் பேசினாள். ஆனால் அவனிடம் மட்டும் பேசவில்லை. ஒரு ஃபார்மாலிட்டிக்கு 'ரகு எப்படியிருக்கிறான்?' என்று விசாரிக்காதது தான் அவனுக்கு வலித்தது.

ஏன்...ஏன்...ஏன்?

என்னை மறந்து விட்டாயா ப்ரியா? இடைப்பட்ட சில வருடங்கள் என்னை மறக்கடித்து விட்டதா?

டீன் ஏஜ் இளைஞனைப்போல் கவலைப்பட்டான்.

அகிலாவின் அண்ணன் வேணு ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு தன் குடும்பத்துடன் சென்னையில் தான் வசித்துக் கொண்டிருந்தார். திடீரென மலேஷியாவில் கைநிறைய சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கவும் குடும்பத்துடன் அங்கு சென்று செட்டிலாகிவிட்டார்.



ஹைக்கூ

இரங்கல் ஊர்வலம்.
கதறியபடி
கடன் கொடுத்தவன் மனசு!

-இரா.அ.தென்றல் நிலவன்.

ஒரே ஏரியாவில் நாலைந்து தெருக்கள் தள்ளி குடியிருந்த மாமன் மகளான் ப்ரியாதான் ரகுவின் விளையாட்டுத்தோழி. ப்ரியா மலேஷியா செல்லும்போது கொஞ்சம் விபரம் புரிகிற வயசு. சொந்த பந்தம் ரகுவை முறைப்பையனாய் வர்ணித்து கிண்டலடித்து பேசியதெல்லாம் ப்ரியா மனசில் மட்டுமல்ல... ரகுவின் மனசிலும் அழுத்தமான நேசத்தைப் பதித்து விட்டிருந்தது.

இடையில் அவ்வவ்போது இரு குடும்பத்தாரும் போனில் பேசிக் கொண்டாலும், நாளாக ஆக, ஏதோவொரு தயக்கம் இந்த இருவர் இடையில் மட்டும் பேச்சு வார்த்தையை தடை செய்து விட்டது. அதற்கு என்ன காரணம் என்று மட்டும் புரியவில்லை.

மாறிய பருவமா? வெட்கமா? அல்லது நட்பைத்தாண்டி மலர்ந்திருந்த காதலா? எதுவென்று புரியவில்லை.

இப்போது இத்தனை வருட இடைவெளியில் ப்ரியா மட்டும் இந்தியா வருகிறாள்.



இதயம் குதூகலித்தாலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை...ரகு.

'அவள் மட்டும் என்னை ஒருவார்த்தைக்கூட விசாரிக்கவில்லை. நான் மட்டும் எதற்கு அவளை வரவேற்க வேண்டும்?'

"ஏற்கனவே பெட் இருக்கேம்மா!"

"எனக்குத் தெரியாதா? அந்த ஸ்பாஞ்ச் பெட்டை எடுத்திடு. எங்க ப்ரியாவுக்கு அதெல்லாம் அலர்ஜி. இலவம் பஞ்சுதான் அவளுக்கு ஒத்துப்போகும். அதுக்காகத்தானே ஆர்டர் கொடுத்து அவசர அவசரமா செய்ய சொன்னேன்! நான் சொன்னதை செய் போ! அடி... மனோ...இங்கே வா!"

"இதோ வந்திட்டேம்மா!" ஓடிவந்தாள் மனோன்மணி.

"அந்த ஜன்னலோரம் இருக்கிற செடியெல்லாம் தொட்டியோட கொண்டு போய் தோட்டத்திலே வை! பூச்சி, பொட்டு ஏதாவது போய் கடிச்சிடப் போவுது!" எல்லாரையும் விரட்டி வேலைவாங்கினாள் அகிலா.

'அடி...ஆத்தி! யாரந்த ப்ரியா? மனுஷிதானே! என்னமோ வானத்திலேர்ந்து குதிச்சி வர்ற தேவதை மாதிரியில்லே... இந்தம்மா இந்த அலட்டு அலட்டறாங்க!' மனோன்மணி ஆச்சர்யப்பட்டாள்.

காவ்யாவிற்கு கூட அகிலா அத்தையின் ஆர்ப்பாட்டம் கண்டு வியந்து போனாள்.

ப்ரியா என்ற பெயரையே அவள் அப்போது தான் கேள்விப்பட்டாள்.

அவளும் ரகுவின் முறைப்பெண் என்ற செய்திதான் வலித்தது காவ்யாவிற்கு.

எப்படியிருப்பாள்? ரகு எதிர்ப்பார்க்கிற மாதிரி ரொம்ப மாடர்ன்காக இருப்பாளோ? ஃபாரின்லேர்ந்து வருகிறவள்... பின்னே அம்மாஞ்சி மாதிரியா வரப் போகிறாள்? காவ்யாவை அப்போதிருந்தே கவலைப் பிடித்து கொண்டது.

ரகுவும் முன்புபோல் சரிவர பேசுவதில்லை. முன்பிருந்த கலகலப்பு மிஸ்ஸிங். இவளிடமும் சிரித்து வைக்கணுமே என்று சிரிக்கிறானேயொழிய அந்த சிரிப்பில் உயிர் இல்லை. அதையெல்லாம் பார்க்க, பார்க்க... கழுத்தை யாரோ நெரிப்பதுப் போல மூச்சு முட்டியது.

***

புருஷோத்தமன் காரை நோக்கிச் செல்ல அகிலா அவர் பின்னே சென்றாள்.

"நேரமாய்டுச்சுங்க... ஃப்ளைட் வர்றதுக்குள்ளே நாம ஏர்போர்ட் போய்டணும்! ஆமா... ரகு எங்கே?" பேசிக் கொண்டே போனவள் நின்று திரும்பி பார்த்தாள்.

"அகிலா... நேரமாகுது நீ வா! ரகு நம்மளோட வரமாட்டேன்னு

சொல்லிட்டான்!"

"என்னது வரமாட்டானா? என்ன விளையாட்டு இது? அவனை கட்டிக்கப்போறவ வர்றா...அவனை வரவேற்க இவன் வரமாட்டானாமா? கொஞ்சம் இருங்க... நான் என்ன ஏதுன்னு கேட்டுட்டு வர்றேன்!" என்றபடி உள்ளேப் போனாள்.

அகிலா உள்ளே செல்லவும், எதிரே கார் சாவியை சுழற்றியபடி ரகுவர்மன் வரவும் சரியாய் இருந்தது.

"ரகு!"

"என்னம்மா?"

"நேரமாகலே... சீக்கிரம் வா?!"

"நேரமாய்டுச்சு தான் ஆபீஸ்க்கு! அதான் கிளம்பிட்டேயிருக்கேன்!"

"ரகு...என்னப்பா இது? சின்னப்பிள்ளையாட்டம் அடம் பிடிக்கறே! இன்னைக்கு மலேஷியாவிலிருந்து ப்ரியா வர்றா!"

"போஸ்டர் ஒட்டணுமா?"

"கிண்டல் பண்ணாதே! வாப்பா... நேரமாகுது!"



ஹைக்கூ

சொல்...பாரதி

ஜகத்தினை அழிக்கலாமா?
எனக்கு உணவில்லை!

உ-தேவி கணேஷ்.

"ஸாரிம்மா! என்னை விட்ரு! கம்பெல் பண்ணாதே! நீயும், அப்பாவும் போறப்ப... நான் எதுக்கு? நீங்க கிளம்புங்க...!"

"ரகு...நீ. எதையோ மனசுல வச்சுக்கிட்டுப் பேசறே!" கண்களை இடுக்கி மகனைப் பார்த்தாள்.

"நீயா... எதையாவது கற்பனை பண்ணிக்காதே! எனக்கு பேச நேரமில்லை... மீட்டிங் இருக்கு. வர்றேன்ம்மா!" சொல்லிவிட்டு விரைவாக நடந்து வெளியேறினான்.

அகிலா சித்தபிரமை பிடித்தவள் போல் நின்று விட்டாள்.

இவர்கள் பேசிய அத்தனையும் காதில் விழ... அப்பாடா... ரகுவுக்கு அந்த ப்ரியா மேல் நாம் நினைப்பது போல் எந்த வித் ஸாப்ட் கார்னரும் கிடையாது' என்று நிம்மதியாய் மூச்சு விட்டுக்கொண்டாள் காவ்யா.

***

பயணிகளை வரவேற்க விமானநிலைய லவுஞ்சில் காத்திருந்தனர் உறவினர்களும், நண்பர்களும்.



அந்த கூட்டத்தில் புருஷோத்தமனும், அகிலாவும் இருந்தனர்.

செக்கிங் முடிந்து இவர்களை நோக்கி புன்னகை பூத்த முகத்துடன் ஓடிவந்தாள் ப்ரியா!

செல்லுலாய்ட் பொம்மையைப்போல் பேரழகையும், இளமையையும் மொத்தமாய் குத்தகை எடுத்தவளாய் ஆண்கள் மயங்கும் வசீகரத்துடன் இருந்த தன் அண்ணன் மகளை பெருமிதத்தில் விம்மும் நெஞ்சுடன் பார்த்தாள் அகிலா.

"ஹலோ அங்கிள்!" உற்சாகமாய் ஓடிவந்து கையைப் பற்றிக் கொண்டாள்.

"எப்படிம்மா இருக்கே?"

"எனக்கென்ன அங்கிள். ரொம்ப ஹாப்பியா இருக்கேன். ஆன்ட்டி நீ எப்படி இருக்கே? என்ன... ஒரேடியா ஆளே மாறிப்போய்ட்டே? அங்கிளுக்கு அக்கா மாதிரியாயிட்டே!"

இதையே வேறு யாராவது சொல்லியிருந்தால் அவள் கன்னத்தில் பளாரென அறைந்திருப்பாள். ஆனால் சொன்னது அண்ணன் மகளாயிற்றே!

"எப்படி கிண்டல் பண்றாப் பார். என் தங்கம்!" என்று அவள் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள்.

"கிளம்பலாமா? வாம்மா ப்ரியா!" என்று முன்னே நடந்தார் புருஷோத்தமன்.

அவர் பின்னே அகிலாவும், ப்ரியாவும் சென்றனர். ப்ரியாவின் கண்கள் இன்னொரு நபரை எதிர்பார்த்து ஏமாந்தன. ஆனாலும் தன் ஏமாற்றத்தை வெளிக் காட்டவில்லை.

செல்லும் அவர்களை ஒரு ஓரமாய் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தான் ரகுவர்மன்.

## 8



தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையை சுற்றுமுற்றும் பார்த்தவள், "பரவாயில்லை... அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்" என்று தோள்களை குலுக்கிக் கொண்டு கூறினாள்.

"ப்ரியா... இது உன் 'வீடு! உனக்கு என்ன வேணும்னாலும் வெளிப்படையா சொல்லு! உடனே ஏற்பாடு பண்ணித்தர்றேன், தயங்காதே!" என்றாள் அகிலா.

"ப்ச்...போதும் ஆன்ட்டி! மாமா எங்கே? நம்மை வீட்லே சேர்த்த உடனே ஆபீஸுக்கு ஓடிட்டாரா?"

"அப்பாவுக்கும், பிள்ளைக்கும் ஆபீஸ்தான் வீடு! இங்கே வந்தாலும் ஆபீஸைப் பத்திதான் பேசுவாங்க. ரகுவுக்கு ஆபீஸ்லே அர்ஜென்ட்டா

மீட்டிங்ல கலந்துக்கணும்னுதான் ஓடிட்டான். அவனுக்கு உன்னை ஏர்ப்போட்டுக்கு வந்து வரவேற்கணும்னு ரொம்ப ஆசை! ஆனா, இந்த மீட்டிங்கால முடியாமபோய்டுச்சி! நீ ரகுவைப் பார்த்து ரொம்ப வேருஷமாய்டுச்சில்லே? இப்பப் பார்– என் பிள்ளை ராஜாவாட்டம் ஜம்முனு இருக்கான்!"

ரகுவைப்பற்றிய செய்திகள் காதில் விழுந்த போது இதயம் படபடப்பதை உணர்ந்தாள் ப்ரியா.

"எனக்காக சமாதானம் சொல்லாதீங்க ஆன்ட்டி! ஆபீஸ் எம்டி அவர்! தான் நினைச்சா மீட்டிங்கை கேன்சல் பண்ணவோ, ஒத்திப்போடவோ முடியாதா என்ன? உங்க பிள்ளை என்னை ரிசீவ் பண்ண வரணும்னு நான் எதிர்பார்க்கலே!"



ஹைக்கூ

இஞ்சா கசக்குகிறான்
உள்ளங் கையில்..
தேய்கிறது ஆயுள் ரேகை!
-பாரதி தேவா.

"ப்ரியா-ரகு மேல கோபமா? நீ எதிர்பார்க்கலேன்னு சொல்றது பொய்யுன்னு எனக்குத் தெரியும். நானும் உன்னை மாதிரி ஒரு பொண்ணுதான்டி! உன் வயசை தாண்டி வந்தவதான் நானும். உன்னை என் அண்ணனும், அண்ணியும் இங்கே ஏன் அனுப்பி வச்சாங்கன்னு எனக்குத் தெரியும். ஏன்னா... உன்னை இங்கே அனுப்பிவைக்கச் சொன்னதே நான்தான். படிப்பை பாதியிலே விட்டுட்டு அவங்க அனுப்பினதும் உடனே கிளம்பின உன் மனசுக்குள்ளே என்ன இருக்குதுன்னும் எனக்குத் தெரியும். அதனால என்கிட்டே நீ எதையும் மறைக்காதே! ஏன்னா நான் உன் கட்சி! உன்னுடைய விளையாடெல்லாம் என் பிள்ளைகிட்டே வச்சுக்க... எடுபடும்!" என்றாள் கிண்டலாய்.

"ஆன்ட்டி... உன்னை நான் ரொம்ப சாதாரணமா நினைச்சேன். ஆனா, நீ பயங்கரமான ஆளு!" என்றபடி அகிலாவின் கன்னத்தை இருகைகளால் பற்றி செல்லமாய் கிள்ளினாள்.

"அதான் சொல்லிட்டேனே... இந்த விளையாட்டெல்லாம் ரகுகிட்டே வச்சுக்கன்னு–"

"சீ-போ... ஆன்ட்டி!"

"அப்புறம் ப்ரியா... இன்னொரு முக்கியமான விஷயம்!"

"என்ன?"



"இங்கே.. நம்ம வீட்லே காவ்யான்னு ஒருத்தி வந்து தங்கியிருக்கா! அவளும் ரகுவுக்கு முறைப்பெண்தான்!"

"........!?" அதிர்ந்தாள் ப்ரியா.

அகிலா.... அவளைப் பற்றிய முழு விபரத்தையும் சொல்லி முடித்தவள்... "என்னப் பண்ணுவியோ, எனக்குத் தெரியாது. அவளை இந்த வீட்டை விட்டு விரட்டியாகணும். கொஞ்சம் விட்டா அவ நிரந்தரமாகவே இங்கே தங்கிவிடுவாளோன்னு பயமாயிருக்கு ப்ரியா!"

"நான் பார்த்துக்கறேன்... பயப்படாதீங்க!" என்றவளுக்கு ரகுவை பார்க்கும் ஆர்வத்தைவிட காவ்யாவை பார்க்க வேண்டும் என்கிற ஆர்வம் தான் எழுந்தது.

***

கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு வாசலுக்கு ஓடோடி வந்தாள் அகிலா.

காரை விட்டு இறங்கிய ரகு– உள்ளே வந்துக் கொண்டிருந்தான்.

"ரகு!"

"என்னம்மா?"

"ப்ரியா வந்துட்டா!"

"அப்படியா? சரி!"

"என்ன ரகு அப்படியாங்கிறே? நீ ஏர்ப்போர்ட்டுக்கு வரலேன்னு அவளுக்கு வருத்தம். நீ போய் அவளை சமாதனாப்படுத்து!"

"நான் ஏம்மா சமாதானப்படுத்தணும்? அதான் நீயும் அப்பாவும் ஏர்ப்போர்ட்டுக்குப் போய் அழைச்சிட்டு வந்தீங்கள்லே? அப்புறமென்ன?"

"என்ன இருந்தாலும் நீ வர்ற மாதிரி ஆகுமா? ப்ரியா ரூம்லதான் இருக்கா! சும்மா போய் விசாரி!"

"ஸாரிம்மா... என்னால முடியாது. இவ பின்னாடியே வாலை பிடிச்சுக்கிட்டு ஓட என்னால முடியவே முடியாது. வேணும்னா– அவளை என் ரூமுக்கு வரச்சொல்லு. ரெண்டு வார்த்தை பேசறேன்!" என்றவன் விருட்டென அம்மாவைத் தாண்டி நடந்தான்.

நடந்தானேயொழிய அவன் கண்கள் ப்ரியா தென்படுகிறாளா என்று அலை பாய்ந்தது.

அகிலா விக்கித்துப் போனாள்.

'இவன் மனசில் என்னதான் இருக்கிறது?'

***

பாதாம் அல்வா ஸ்வீட்டும், காபியும் எடுத்துக் கொண்டு ப்ரியாவின் அறைக்குள் சென்றாள் காவ்யா.

கதவு திறந்தேயிருந்தது. இவள் உள்ளே நுழைவதற்கும், சோப் கமகமக்க ப்ரியா பாத்ரூமிலிருந்து வெளிப்படவும் சரியாய் இருந்தது.

"ப்ரியா அவளைப் பார்த்ததும் அவன் யாரெனப் புரிந்துக் கொண்டாள். உள்ளுக்குள் பொசு பொசவென எரிந்தது.

"ஏய்...யார் நீ? இந்த வீட்டு செர்வன்ட்டா? என்ன இது கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்லாம நீ பாட்டுக்கு உள்ளே நுழையறே?" கத்தினாள்.

காவ்யா அரண்டுப்போனாள்.

"ஐயோ...இல்லேங்க... நான் வந்து...!"

"என்ன வந்து...போயி? கதவு இருக்கில்லே? தட்டிட்டு உள்ளே வரத்தெரியாதா? சே...எப்படித்தான் இந்த மாதிரி ஆட்களையெல்லாம் எங்க ஆன்ட்டி உள்ளே விடறாங்களோ தெரியலே! சரி..சரி...அதை இப்படி வச்சிட்டுப் போ! இனிமே வர்றதானா கதவை தட்டிட்டு உள்ளே வரணும் புரியுதா?"

"ஹலோ....மிஸ் ப்ரியா! நீங்க நினைக்கிற மாதிரி நான் இந்த வீட்டு செர்வன்ட் இல்லே!"

"பின்னே?" -ஒன்றும் தெரியாதவள்போல் முகத்தில் வியப்பைக் காட்டினாள்.

"உங்களை மாதிரி நானும் புருஷோத்தமன் அங்கிளோட உறவுக்காரப் பொண்ணு!"

ஓ...ஸாரி..வெரி ஸாரி! உங்க டிரஸ்ஸும், தோற்றமும் கையிலே காபி, தட்டோட வந்த கோலமும் பார்த்து இந்த வீட்டு வேலைக்காரின்னு நினைச்சிட்டேன்!"

காவ்யாவிற்கு சுருக்கென வலித்தது.

'என் தோற்றம், ரகு பாராட்டிய என் தோற்றம் இவள் கண்களுக்கு கேவலமாகவாத் தெரிகிறது?'

"எனிவே..ஐ யம் ப்ரியா... ஃப்ரம் மலேஷியா"

"ஐ.. ஐயம் காவ்யா! ஃப்ரம் சீர்காழி!"

"ஓஹோ...இங்கே என்னப் பண்றீங்க?"

"ரகு மாமாவோட கம்பெனியிலதான் ஒர்க் பண்றேன்!"

'ரகு மாமாவா? ராட்சஷி.. அவர் பெயரை உச்சரிக்க உனக்கென்ன உரிமை இருக்கிறது? இருடி... உன்னை பார்த்துக்கறேன்.'



## ஹைக்கூ

*மற்றவர் வீடு கட்ட*
*ஜாதகம் பார்க்கிறார்*
*மரத்தடி ஜோசியர்.*
*-சரவண பாரதி.*



"ஓ...அப்படியா?"

"இந்த சென்னையிலே எனக்கு ஃப்ரன்ட்ஸ் யாரும் கிடையாது. நல்ல வேளை... கடவுளாப் பார்த்து உங்கள இங்கே அனுப்பி வச்சிருக்கார்."

"ஸோ... நீங்க என்னை உங்க ஃப்ரன்டா நினைக்கறீங்க"

"ம்....!"

"உங்களுக்கு டான்ஸ் ஆடத்தெரியுமா?"

"எதுக்கு கேக்கிறீங்க?"

"நான் வீக்லி ஒன்ஸ் டிஸ்கொதே போறவ. என்னோட சர்க்கிள் பெரும்பாலும் என்னோட விருப்பு வெறுப்புகளோட ஒத்துப்போகிற வங்களாகத்தான் இருக்காங்க. அதே மாதிரி உங்களிடமும் சில தகுதிகளை எதிர்பார்க்கறதல என்ன தப்பு?"

"..............!?"

"என் ஃப்ரன்ட்ஸ் டிஸ்கொதே போவாங்க. ஸம்டைம்ஸ் ட்ரிங்ஸ் சாப்பிடுவாங்க. சிலபேர் ஸ்மோக் பண்ணுவாங்க. எல்லோரும் கார் வச்சிருக்காங்க! இப்ப சொல்லுங்க. உங்ககிட்டே இதிலே ஒரு தகுதியாவது இருக்கா? சொல்லுங்க!" என்றாள் ஏளனமாக.

அவள் தன் ஏழ்மையை கேவலப்படுத்துவது புரிய.. அவமானத்தில் உடல் கூம்பிப் போனது.

***

டைனிங் டேபிள் முன் அப்பாவும், மகனும் அமர்ந்திருக்க.. அகிலா பரிமாறாமல் திரும்பி திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன அகிலா! சீக்கிரம் பரிமாறு! எவ்வளவு நேரம்தான் தட்டை வெறிச்சிப் பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிறது?" என்றார் புருஷோத்தமன்.

"கொஞ்சம் பொறுங்க.. ப்ரியா வந்திடட்டும். மனோ.. ப்ரியாவை சீக்ரம் வரச் சொன்னேன்னு சொல்லு!"

மனோன்மணி அகன்றாள்.

புருஷோத்தமன் சத்தம் வராமல் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"இல்லே...ப்ரியா பொண்ணு தானே?"

"இதென்ன இப்படியொரு கேள்வி?"

"இந்த வீட்லே தான் ஆம்பளைங்களோட சேர்ந்து பொம்பளைங்க சாப்பிடக்கூடாதே! அதனால கேட்டேன்!"

"ப்ரியா வசதியா வளர்ந்தப் பொண்ணு! அதுவும் ஃபாரின்ல வளர்ந்தவ! அவகிட்டே இந்தப் பாகுபாடை சொல்ல முடியுமா? இங்கிலீஷ்ல நாலு வார்த்தை சொல்லி சிரிக்க மாட்டாளா?"

"கிராமத்துல வளர்ந்தப் பொண்ணுங்க பெரியவங்க சொல்ற பேச்சைக் கேட்கும். ப்ரியா மாதிரியான பொண்ணுங்க பெரியவங்க

பேச்சை இண்டல் பண்ணுவாங்கன்றே! சரி... சரி!" என்றார் புருஷோத்தமன்.

அகிலா கணவரை முறைத்தாள்.

"ஹலோ... எனக்காகத்தான் எல்லோரும் காத்துக்கிட்டு இருக்கீங்களா? நான் வந்தாச்சு!" ஆர்ப்பாட்டமாய் வந்தமர்ந்தாள் ப்ரியா.

"வாம்மா!" என்றார் புருஷோத்தமன்.

யதேச்சையாய் பார்ப்பதுபோல் நிமிர்ந்து அவளைப் பார்த்த ரகு மனதில் பொங்கிய காதலை அடக்கி, "ஹாய்" என்றான் ஃபார்மாலிட்டிக்கு.

அவனை அப்போது தான் நிமிர்ந்துப் பார்த்த ப்ரியாவின் இதயம் தடதடத்தது.

"ஹாய்" என்றாள் பதிலுக்கு.

"இதுவரை போனில் கூட நம்மை ஒரு வார்த்தை விசாரிக்கவில்லையே என்கிற வருத்தம் ரகுவிற்கும், ஏர்ப்போர்ட்டிற்கு ரிஸீவ் பண்ண வரவில்லை. வீட்டிற்கு வந்தும் தேடிவந்து பேசவில்லையே என்கிற வேதனை ப்ரியாவிற்கும் எழ- நாம் ஏன் பேச வேண்டும்? என்கிற ஈகோ அவர்கள் வாயை அடைக்க... தலைகவிழ்ந்தபடி சாப்பிட ஆரம்பித்தனர்.





*சரளமாக ஆங்கிலம் பேச*
*தொடர்ந்து பாருங்கள்*
*தமிழ் நிகழ்ச்சிகள் டி.வி யில்.*

-எஸ். குமார்.

## 9



காவ்யா ப்ரியாவைக் கண்டாலே காததூரம் ஒதுங்கிப் போனாள். அவளின் அதீத அழகு அவளுள் கலவரத்தை உண்டு பண்ணியிருந்தாலும் ரகு அவளை நிமிர்ந்துக் கூட பார்க்காதது சொல்ல முடியாத ஆனந்தத்தைத் தந்தது.

ரகுவும் வேண்டுமென்றே ப்ரியாவின் எதிரில் காவ்யாவிடம் வலியப்போய் சிரிக்க சிரிக்க பேசுவான். அந்த நேரத்தில் ப்ரியாவின் முகத்தில் பொங்கும் கோபத்தை அடிக்கண்ணால் கண்டு ரசிப்பான்.

'மைடியர் ப்ரியமான ப்ரியா! உன்னை எனக்குத் தெரியும். உன்



மனசு முழுக்க நான் நிரம்பியிருக்கிறேன் என்பது நன்றாகவேத் தெரியும். ஆனால், என்ன அலட்சியபடுத்துவதுப்போல் நடந்து, நடித்துக் கொண்டிருக்கிறாய். நீயாக உன் வாயால், "ஐ லவ் யூ ரகு" என்று சொல்ல வைப்பேன். அதுவரைக்கும் நீ யாரோ, நான் யாரோ!'

காவ்யா கொடுத்த காபியை பருகிக் கொண்டிருந்த ரகுவின் எதிரே சோபாவில் வந்தமர்ந்த ப்ரியா கால்மேல் காலைப் போட்டுக் கொண்டாள்.

அந்த உடையும், அவள் பயன்படுத்தியிருந்த உயர்ரக செண்ட்டின் மணமும் அவனை என்னவோ செய்தது.

'என் ப்ரியா- எவ்வளவு அழகாக இருக்கிறாள்?' காபியுடன் சேர்த்து அவளையும் கண்களால் பருகினான்.

அவளின் சிவந்த முகத்தை மேலும் சிவப்பாக்க எண்ணி, "காவ்யா-" என்றழைத்தான்.

அடுத்த கணமே ஓடிவந்தாள்.

"எள்ளுங்கறதுக்கு முன்பே எண்ணெயா வந்து நிக்கறியே! தட்ஸ் குட்! காபி யார் போட்டது?"

"நான் தான்...ஏன் நல்லாயில்லையா?"

"யார் சொன்னது? சூப்பரா இருந்தது. இனி எனக்கு உன் கையாலேயே காபி போட்டுக் கொடு- ஓக்கே!"

"ம்!" என்று தலையாட்டிய காவியாவிற்கு தலைகால் புரியவில்லை. அவன் குடித்துவிட்டு தந்த தம்ளரை நாணம் பூக்க வாங்கிக் கொண்டு அகன்றாள்.

ப்ரியாவுக்கு கோபம் தலைக்கேறியது. ரகுவை முறைத்தபடி பக்கத்திலிருந்த போனை தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள்.

நம்பரை ஒற்றியெடுத்து "ஹலோ... ஷகிலா ப்ளீஸ்" என்றாள்.

"ஷகிலா ஹியர்" என்றது மறுமுனை.

"ஹாய் ஷகிலா- நானுதான் ப்ரியா பேசறேன்! நீ எப்படி இருக்கே? தம்ம ஃப்ரண்ட்ஸ் எப்படியிருக்காங்க?"

"............"

"ரொம்ப நாள் இங்கே இருக்க மாட்டேன். சீக்கிரம் அங்கே வந்திடுவேன். தென், வினோத் எப்படியிருக்கான்? யூசூப்கிட்டே நான் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு! உங்கண்ணன் டோனி இருந்தா கூப்பிடு பேசணும்!

ரகு அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஹாய் டோனி... ஹவ் ஆர் யூ?"

"............"

"தாங்க்ஸ்.....தாங்க்ஸ்! உனக்கு என்ன வேணும்னு சொல்லு! நான் நம் ஊருக்கு வரும்போது வாங்கிட்டு வர்றேன்!"

"............"

"சேச்சே... உன்னை பிடிக்கலேன்னு அர்த்தம் பண்ணிக்காதே!

பிடிக்காமலா இவ்வளவு நேரம் பேசறேன்!"

அவள் பேசப்பேச ஆத்திரம் எழுந்தது ரகுவிற்கு அதற்குமேல் அங்கு இருக்கப் பிடிக்காமல் விருட்டென எழுந்து தன்னறைக்குப் போய் விட்டான்.

எப்போதோ லைனை கட்பண்ணிவிட்ட ப்ரியா அவன் கோபம் கண்டு அடக்கமாட்டாமல் சிரித்தாள்.

அகிலா ரகுவின் அறைக்குள் நுழைந்தாள். ஷர்ட்டை இன் பண்ணிக் கொண்டு ஆளுயர டிரஸ்ஸிங் டேபிள் முன் நின்று சரிப்பார்த்தான். கண்ணாடியில் அம்மாவின் பிம்பம் தெரிய...திரும்பினான்.

"என்னம்மா?"

"ஆபீஸ்க்கு கிளம்பறியாப்பா?"

"இதென்ன கேள்வி? தெரியாத மாதிரி!"

"ரகு... நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைச்சுக்க மாட்டியே!"



## ஹைக்கூ

வருத்தப்பட்டான்

அடிபட்ட புறா விழுந்தது
அடுத்தவன் வீட்டில்.

-மாடப்பள்ளி ஜெயசீலன்.

"நீ இப்பல்லாம் தப்புத்தப்பாதான் கேட்கறே! என்ன விஷயம் சொல்லு?" செண்ட்டை பீய்ச்சிக் கொண்டான்.

"நீ ஏன் ப்ரியாக்கிட்டே முகம் கொடுத்தே பேச மாட்டேங்கறே?"

"முகத்தை தூக்கிக் கொடுத்திட்டா... நான் எப்படி நடமாட முடியும்?"

"கிண்டல் பண்றதா நினைப்பா? ப்ரியா எவ்வள்வு வருத்தப்படறாத் தெரியுமா? நம்மளைப் பார்க்கணுன்னு தானே மலேஷியாவிலேர்ந்து வந்திருக்கா! அவகிட்டே இதுவரை ஒருநாளாவது அஞ்சு நிமிஷமாவது பேசியிருப்பியா? என்னமோ விரோதி மாதிரி முகத்தைத் திருப்பிக்கிட்டுப் போறே! ப்ரியா சின்னப் பொண்ணு. அவ மனசு ளஎன்ன பாடுபடும்? இதோ இருக்கிற சீர்காழியிலேர்ந்து வந்த காவ்யாகிட்டே மட்டும் மூச்சு விடாமப் பேசறே! உன் மனசுல நீ என்னதான் நினைச்சிட்டிருக்கே?"

"நான் என்னமோ நினைச்சிட்டிருக்கேன். அதைப்பத்தி என்ன? இப்ப நான் என்ன பண்ணனும்ங்கறே? அதைச் சொல்லு!"

"ப்ரியாக்கிட்டே நீ சகஜமா பேசணும்!"





"அவ என்கிட்டே சரியா பேசாதப்ப நான் மட்டும் ஏம்மா பேசணும்?"

"நம்ம வீடுதேடி வந்தவங்ககிட்டே நாமதான் வலியப்போய் பேசணும்! காவ்யாகிட்டே பேசறமாதிரி!"

"அவளை ஏம்மா இழுக்கறே? பாவம்!"

"சரி..... ப்ரியாவுக்கு நம்ம ஆபீஸை பார்க்கணும்னு ஆசையாயிருக்காம்!"

"பார்க்கட்டும்!"

"அவளை உன் கூடவே அழைச்சிட்டுப போ ரகு!"

சற்று நேரம் யோசித்தான் ரகு. பிறகு சொன்னான்.

"இன்னைக்கு வேண்டாம்! எனக்கு முக்கியமான வேறொரு வேலை இருக்கு. நாளைக்கு அழைச்சிட்டுப் போறேன்" என்றான்.

இந்தளவிற்காவது மகன் சம்மதித்தானே என்று சந்தோஷப்பட்ட அகிலா "சரி" என்றாள்.

***

காவ்யாவிற்கு ஒன்னும் புரியவில்லை. எதற்காக திடீரென்று தன் டேபிளை ரகு இருக்கும் அறைக்கு மாற்றினார்கள்?

பியூனிடம் கேட்டே விட்டாள்.

"தெரியாதுங்க மேடம்! ரெண்டு நாளைக்கு இந்த டேபிள் உள்ளே இருக்கட்டும்னு சார்தான் சொன்னார்! உங்களை உள்ளே அவர் ரூம்லேயே உட்காரச் சொன்னார்!" என்றான்.

காவ்யாவிற்கு காரணம் பிடிபடாவிட்டாலும், அந்த மாற்றம் சந்தோஷத்தையே தந்தது. இரண்டு நாட்களும் ஒரு நிமிடமும் மிஸ் பண்ணாமல் ரகு தன் கண் பார்வையிலேயே இருக்கப்போகிறான் என்கிற சந்தோஷம்.

மறுநாள்!

ரகு கார் ஓட்ட அவன் பக்கத்தில் அமர்ந்தபடி ஓரக்கண்ணால் அவனை அவளும், அவளை அவனும் ஒருவருக்கொருவர் அறியாதபடி பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவள் தன் பக்கத்தில் அமர்ந்திருப்பதே.... அளவிடமுடியாத சந்தோஷத்தைத் தந்தது ரகுவுக்கு.

'சரியான உடம்பு! வாயைத்திறந்து எதையாவது பேசுகிறாளா? திமிர்... உடம்பு முழுக்கத் திமிர்! என்னைக் கடுப்படிக்கணும்னு டோனிங்கறவனிடம் உருகி உருகி பேசினேயில்லே! இன்னைக்குப்பார்- உன்னை எப்படி அழவைக்கிறேன்னு!' ரகு தீர்மானித்தான்.

'ஏய் முண்டம்! அப்சரஸ் மாதிரி மாமன் மகள் பக்கத்தில் தனியாக அமர்ந்திருக்கிறாளே.... அவளிடம் மனம் விட்டு பேசுவோம் என்று கொஞ்சமாவது புத்தி வேலை செய்யாதா? என்னிடம் பேசக்கூடாதென்று அவ்வளவு வீம்பா? எத்தனை நாளைக்கு?



அதையும் பார்த்துவிடுகிறேன!' மனம் குமைந்தாள் ப்ரியா.

பேரழகியுடன் நுழைந்த தங்கள் எம்டியை கண்ணிமைக்காமல் பார்த்தது ஆபீஸ் மொத்தமும்.

''வா......ப்ரியா!''என்று தன்னறைக்கு அழைத்துச்சென்றான்.

ஆபீஸின் பிரமாண்டமும், ஆடம்பரமும் ப்ரியாவிற்கு திருப்தியைத் தந்தது.

ஆனால், ரகுவின் அறைக்குள்ளேயே காவ்யாவும் அமர்ந்திருந்தது அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் தந்தது. ரகு அவள் முகவோட்டத்தைக்காணத் தவறவில்லை. காவ்யாவும் அங்கு ப்ரியாவை எதிர்ப் பார்க்கவில்லை.

''ஹலோ ப்ரியா!'' என்று தலையசைத்து வரவேற்றாள் மரியாதை நிமித்தமாக.

ப்ரியா அவளை அசட்டை செய்தாள்.



ஹைக்கூ

நேரம் சரியில்லை
நஷ்டத்தில் ஓடுகிறது
கடிகாரக் கடை

-அ.சையத் அலி.

"சிட் டவுன் ப்ரியா! முதமுதலா ஆபீஸ்க்கு வந்திருக்கிறே! என்ன சாப்பிடறே?"

"ஒண்ணும் வேணாம்!"

"சாப்பிடாம அனுப்பறதா உத்தேசமில்லே! காவ்யா- நம்ம மூணு பேருக்கும் ஜூஸ் கொண்டுவரச் சொல்லு!" என்றவன் அவள் முகத்தை கூர்ந்து பார்த்துவிட்டு "இப்படி வா!" என்றான்.

காவ்யா அருகில் எழுந்துச் சென்றாள்.

"இந்த சேலையில் நீ ரொம்ப அழகாயிருக்கே காவ்யா! பட், இந்த ஸ்டிக்கர் பொட்டு சைஸ் இன்னும் கொஞ்சம் சின்னதாயிருந்தா- நல்லாயிருக்கும்! ஆமா ப்ரியா.. நீ இவள்ள மாதிரி சேலையெல்லாம் கட்ட மாட்டியா? கட்டினா- காவ்யா மாதிரி நீயும் அழகாயிருப்பே!" என்றான் ரகு!

"ஷிட்!" என்று டேபிள் மீது ஓங்கி குத்திவிட்டு விடுவிடுவென வெளியேறிவிட்டாள் ப்ரியா.

ரகு ஓங்கி சிரிக்க ஆரம்பித்தான்.

"அப்பாடா இனிமே ஆபீஸ் பக்கமே தலை வச்சும் படுக்க மாட்டா! நாளைலேர்ந்து பழைய படி உன் டேபிளை மாத்திப் போடச் சொல்லிடு

காவ்யா!"என்றான்.

காவ்யாவுக்கு நடந்துக் கொண்டிருந்த சம்பவங்களின் காரணகாரியம் புரியவில்லை. ஆனால், ரகு அவளை அழகாயிருப்பதாக சொன்னது மட்டும் மனதில் உறைந்துப்போக... அவன் மீதிருந்த காதலின் அளவு இன்னும் இன்னும் கூடிப்போயிற்று.



## 10

"என்னங்க?" படுக்கையறையை ஒட்டிய பால்கனியில் கணவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்த அகிலா அழைத்தாள்.

"ம்...என்ன?"

"நம்ம ரகுவுக்கும் வயசாகிக்ட்டேப் போகுது!"

"சரி......அதுக்கென்ன இப்ப?"

"என்னங்க கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாம அதுக்கென்ன இப்பன்னு கேக்கறீங்க? நம்ம கடமைய்யை நல்லபடி முடிச்சு வைக்கணுமில்லையா? அதைப்பற்றி யோசிச்சு பார்த்தீங்களா?"

"என்ன கடமை?"

"புரியாத மாதிரி பேசாதீங்க! நம்ம ரகுவோட கல்யாணத்தைப் பத்திதான் சொல்றேன்."

"கல்யாணம்னா அவ்வளவு ஈஸியா நினைச்சிட்டியா அகிலா? எவ்வளவு வேலைகள் இருக்கு? இன்னும் நாம ரகுவுக்கு பொண்ணு பார்க்கவே ஆரம்பிக்கலே. பொண்ணு பார்த்து, அது ரகுவுக்கு பிடிச்சி, ஜாதகப் பொருத்தம் பார்த்து...அப்புறம் அது இதுன்னு எவ்வளவு வேலை இருக்கு?"

"ரகுவுக்கு பொண்ணு பார்க்க ஆரம்பிக்கணுமா? என்ன விளையாடறீங்களா? தங்கச்சிலை மாதிரி ப்ரியாவை கையிலே வச்சுக்கிட்டு பொண்ணு பார்க்கணுமா? நல்லா சொன்னீங்க!" என்றாள் கிண்டலாய்.

"நீதான் விளையாடறே அகிலா! நீயாக உன் விருப்பத்துக்கு முடிவுப்பண்ணாதே! ரகுவோட விருப்பத்துக்கு மாறா நான் எந்த முடிவும் எடுக்க மாட்டேன்!."

"எனக்குப் புரியலே!" என்றாள் நெற்றி சுருங்க.

"நானும் கவனிச்சேன் அகிலா! ப்ரியா நம்ம வீட்டுக்கு வந்து ரெண்டு மாசமாயிருச்சி! ஆனா, ரகு ஒருநாள் கூட ப்ரியாவிடம் ப்ரியமாய் ஒரு வார்த்தைக்கூட பேசலே! அவளைக் கண்டாலே.... ஆமை மாதிரி கூட்டுக்குள்ளே பதுங்கிக்கறான். இதிலேர்ந்து என்ன புரியுது? ரகுவுக்கு ப்ரியாமேல துளிக்கூட விருப்பமில்லேன்னு!"



"நீங்களும் உங்க கண்டுபிடிப்பும்? ரகுவைப்பத்தி உங்க பிஸினஸ் மூளைக்கு தெரிஞ்செல்லாம் அந்தளவுதான். அவன் மனசுல என்ன இருக்குன்னு எனக்குத்தெரியும். அவன் ஏன் ப்ரியாகிட்டே பேசறதில்லேன்னும் தெரியும்.அத்தனைக்கும் காரணம் அவன் ப்ரியா மேல உயிரையே வச்சிருக்கிறதுதான். பெரியவங்க நாமதான் ஆக வேண்டிய காரியத்தை கவனிக்கணும்!"

"இதோப் பாரு அகிலா! நீ என்ன சொன்னாலும் சரி! நடுவே வந்து எனக்கு ப்ரியாவை பிடிச்சிருக்குப்பான்னு சொன்னாதான் அதுக்குப் பிறகு நடக்க வேண்டியதை கவனிப்பேன்! அவன் விருப்பத்துக்கு மாறா கட்டாயப்படுத்தி எந்த காரியத்திலும் ஈடுபடமாட்டேன்! காலையிலே சீக்கிரமா ஃபாக்டரி போகணும். இப்பவே தூங்கினாதான் சரியாயிருக்கும்!" என்றபடி எழுந்துக்கொண்டார் புருஷோத்தமன்.



### ஹைக்கூ

நடக்க விருப்பமின்றி
அந்த மரத்தில் தொங்கும்
சிலந்திக்கு
எதுக்கு எட்டுக் கால்கள்.
-சுலோபா

'உங்க மனசுல என்ன இருக்குன்னு எனக்குத் தெரியும். வந்திருக்கிற பரதேசி காவ்யாவை மருமகளாக்கணும்னு தானே? அதுமட்டும் நடக்காது. என் எண்ணப்படிதான் எல்லாமே நடக்கும்' அவர் முதுகையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அகிலா உறுதி பூண்டாள்.

***

"ரொம்ப போரடிக்குது ஆன்ட்டி!" சாப்பிட்டுக் கொண்டிருந்த ஐஸ்க்ரீமை பாதியில் வைத்து விட்டு நெட்டி முறித்துக் கொண்டாள் ப்ரியா.

"விசிடியில படம் பாரேன்!"

"இது அதைவிட போர்! எனக்கு இந்தனூண்டு ஸ்க்ரீன்ல படம் பார்க்க பிடிக்காது. தியேட்டருக்குபோய் பார்த்தாதான்... திருப்தியாயிருக்கும்."

"அவ்வளவுதானே! சாயந்திரம் என் ப்ரியாகுட்டி சினிமாவுக்கு

போகப்போகிறாளாம்! அதுக்க நான் ஏற்பாடு செய்வேனாம்!" என்றாள் செல்லமாக அகிலா.

"நான் மட்டும் தனியாகவா?"

"ம்ஹூம்… ரகுவோட!"

ப்ரியாவின் உள்ளம் அந்த வார்த்தைகேட்டு குதூகலித்தது.

மாலை!

ரகுவின் கார் போர்டிகோவில் தஞ்சமடைந்தது. எதிர்ப்பட்ட அகிலா "வாப்பா" என்று வரவேற்றாள்.

"என்னம்மா… சீக்கிரம் கிளம்பி வான்னு போன் பண்ணியே என்ன விஷயம்?"

அதே நேரம் காவ்யாவும் அலுவலகம் முடிந்து வீட்டிற்குள் நுழைந்துக் கொண்டிருந்தாள்.

"நம்ம ப்ரியா சினிமாவுக்கு போகணும்னு ஆசைப்பட்டா. ரெண்டு டிக்கட்டும் ரிசர்வ் பண்ணிட்டேன். அவளை நீ சினிமாவுக்கு அழைச்சிட்டுப் போகணும்!"

அந்த இனிய செய்தியை ரகு எதிர்ப்பார்க்கவில்லை. ப்ரியாவுடன் சேர்ந்து படம் பார்க்கப் போகிறோம் என்பதே… தலைமுதல் கால்வரை குறுகுறுத்தது. எதேச்சையாக பக்கவாட்டில் திரும்பிய ரகுவின் கண்களில் ப்ரியா விழுந்தாள்.

அவனுடன் வெளியில் செல்லத்தயாராக அட்டகாசமாக உடையணிந்துக் கொண்டு கதவோரம் சாய்ந்தபடி அவன் பேச்சை செவியில் உள்வாங்கிக் கொண்டிருந்தாள். அவளை சீண்டிப்பார்க்க நினைத்தான் ரகு.

"ஏம்மா… எனக்கு வேற வேலையே இல்லையா? ஆபீஸ் வேலை ஆயிரமிருக்கு. முக்கியமான ஒரு ஆளை இன்னைக்கு பார்க்கணும்னு இருந்தேன். கெடுத்திட்டியே அவளை சினிமாவுக்கு அழைச்சிட்டுப் போக நான்தான் கிடைச்சேனா?"

"ரகு… சத்தமாப் பேசாதேப்பா… ப்ரியா காதிலே விழுந்திடப்போகுது! நீ பேசுறது கொஞ்சம் கூட சரியில்லே ரகு! நீ ரொம்ப மாறிட்டே!"

"சரி… சரி… டிக்கட் ரிசர்வ் பண்ணினப்ப மூணு டிக்கட்டா ரிசர்வ் பண்ணியிருக்கலாமே! பாவம்… காவ்யா, அவளையும் அழைச்சிட்டுப் போவேனே!"

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நீ சீக்கிரம் டிரஸ் பண்ணிக்கிட்டு வா!"

இவர்கள் பேசிய அனைத்தும் ப்ரியாவின் காதில் விழ… ஆத்திரம் தலைக்கேறியது.

விடுவிடுவென அவர்கள் அருகில் வந்தவள், ரகுவை ஏளனமாய் பார்த்து விட்டு அகிலாவின் பக்கம் திரும்பினாள். "ஆன்ட்டி, எனக்கு தலைய வலிக்குது. நான் பிச்சருக்கு வரலே… எந்த பரதேசி நாயையாவது அழைச்சிட்டு போகச் சொல்லுங்க!" என்றாள் முகம் சிவக்க.



"என்ன ப்ரியா திடீர்னு?" அகிலா பதறினாள்.

"எனக்குப் பிடிக்கலே...வற்புறுத்தாதீங்க!" என்றாள் பட்டென்று.

"அவதான் தலைய வலிக்குதுன்னு சொல்றாளே! விடும்மா! டிக்கட் வேஸ்டாகக் கூடாது. காவ்யா நில்லு!" என்றான் வந்தவளை தடுத்து நிறுத்தி.

காவ்யா நின்றாள்.

"சீக்கரம் டிரஸ்மாத்திக்கிட்டு வா! நாம ரெண்டு பேரும் இப்ப சினிமாவுக்குப் போகிறோம்!" என்றான் ரகு.

அகிலாவும் ப்ரியாவும் திடுக்கிட்டு பார்த்துக்கொள்ள காவ்யாவுக்கு பனிமழையில் நனைவதுப் போல் உணர்ந்தாள்.



ஹைக்கூ

பிடித்திருக்கிறது
பிடிக்கவில்லையென
நீ தலையாட்டிய விதம்

-ராஜநிலா

***

தியேட்டரில் கூட்டம் அதிகமில்லை.

ஸ்நாக்ஸ் விற்கும் ஸ்டால் அருகே காவ்யாவுடன் நின்றிருந்த ரகு சுற்றுமுற்றும் பார்வையை ஓட விட்டான்.

அவன் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. ஒரு மறைவான இடத்தில் நின்றுக் கொண்டு இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள் ப்ரியா.

பொங்கி வந்த சிரிப்பை கட்டுப்படுத்தி அடக்கிக் கொண்டான் ரகு.

காவ்யாவுடன் இன்னும் நெருக்கமாய் நின்றுக் கொண்டான்.

"இங்கேப் பார்… ஐஸ் க்ரீம் ஈஷிக் கொண்டிருக்கிறது" இல்லாத ஐஸ்க்ரீமை தன் கர்ச்சீப்பால் அவள் கன்னத்தை துடைத்தான். சிலித்தாள் காவ்யா.

"வா… பிக்சர் போட்டுடப் போகிறான்!" என்றபடி காஷுவலாய் அவள் கையைப் பற்றி அழைத்துச் செல்ல… காவ்யா மயங்கி விழாதக் குறையாக கிறங்கிப் போனாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ப்ரியாவிற்கு உதடுகள் துடித்தன. கண்கள் வியர்த்தன.

***

**கா**வ்யாவின் எதிரே சங்கர் அமர்ந்திருந்தான்.

ஏதேதோ பேசவேண்டுமென்று ஆவலாய் வந்தவன் அவள் இருந்த பிரம்மாண்டமான பங்களாவைப் பார்த்து வாயடைத்துப் போனவனுக்கு பயமும் எழுந்தது.

'தோற்றமும், பேச்சும் மாறுபட்டிருந்த காவ்யாவின் மனதும் திசைமாறிப் போய்விட்டால்? நோ..முடியாது. காவ்யா இல்லாத வாழ்க்கை எனக்கு வேண்டாம். என்ன ஆனாலும் சரி... இன்று வெளிப்படையாய் பேசி விட வேண்டியதுதான்.

" நானும் வந்ததிலேர்ந்து பார்க்கிறேன். எதையோ சொல்ல தவிக்கிறீங்க. சொல்ல முடியாம மென்னு விழுங்கறீங்க! என்ன மாமா... எதுவாயிருந்தாலும் சொல்லுங்க!" என்றாள் சிரித்தபடி காவ்யா.

சங்கர் எச்சிலை கூட்டி விழுங்கிக் கொண்டான். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தான்.

"காவ்யா.. நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன்!" என்றான்.

திடுக்கிட்ட காவ்யா எதிர்பார்க்காதவளாய் எழுந்து நின்றாள்.

"என்ன சொல்றீங்க?"

"ஆமா.. காவ்யா! நான் உன்னை ரொம்ப நேசிக்கிறேன். நீ இப்படி கஷ்டப்படறது எனக்கு பிடிக்கலே! உன் சுமைய நான் சுமக்கிறேன். இந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு வந்திடு" என்றான்.

அதற்கு மேல் தாங்க மாட்டதவளாய், "மாமா உங்க மனசுல இப்படியொரு எண்ணம் இருக்கிறது அதிர்ச்சியாயிருக்கு. நீங்க நினைக்கிற மாதிரி என் மனசில இப்படியொரு அபிப்ராயமே இல்லை. தயவு செய்து இந்த எண்ணத்தை இப்பவே துடைச்சிட்டுப் போங்க!"

சங்கர் அந்த பதிலில் நிலைகுலைந்துப் போனான்.



## 11

"**வா**ங்கண்ணா.... வாங்கண்ணி!" வாய் நிறைய வரவேற்றாள் அகிலா.

வந்தவர்கள் வேறுயாருமல்ல. ப்ரியாவின் பெற்றோர் வேணுவும், விசாலட்சியும்தான். ஏர்போர்ட்டிற்கு புருஷோத்தமனும், ப்ரியாவும் தான் சென்று அழைத்து வந்தனர்.

"எப்படிம்மா இருக்கே?" என்று பாசத்துடன் தங்கையின் கையைப் பற்றிக் கொண்டு கேட்டார் வேணு.

"ரொம்ப நல்லாயிருக்கேண்ணா! நேத்து நைட்டு போன் பண்ணி இண்டியாவுக்கு கிளம்பிக்கிட்டே இருக்கோம்னு சொன்னப்ப, எனக்கு



கையும் ஓடலே, காலும ஓடலே! பார்த்து எவ்வளவு நாளாயிருச்சு!" பாசத்தில் நெக்குருகிப் போனாள்.

ரகுவிற்கு ஆச்சர்யமாக இருந்தது! 'இதென்ன மாமாவும் அத்தையும் திடீரென்று வந்து குதித்து விட்டார்கள்? என்ன விஷயமாக இருக்கும்? குழம்பிய ரகு இன்னொரு விஷயத்தையும் கவனித்தான். ப்ரியா அவனை நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை. வழக்கமாக முகத்தில் உறைந்திருக்கும் சிரிப்பு இல்லை. முகத்தில் எந்த்வித சலனமும் இல்லை.

"வாங்க அங்கிள்!" என்று சிரித்தபடி வேணுவின் அருகில் சென்றான்.

"வாப்பா ரகு! பிஸினஸெல்லாம் நல்லாப்போய்க்கிட்டுருக்குன்னு கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம். இன்னும் உயரத்துக்குப் போகணும். பெஸ்ட் ஆப் லக்!" அவன் முதுகை தட்டிக்கொடுத்தார்.

"அத்தை... நீங்க எப்படியிருக்கீங்க?"

"எனக்கென்னப்பா? நான் நல்லாதான் இருக்கேன்! எங்க ப்ரியாவுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி வச்சிடோம்னா நிம்மதியா மூச்சு விடுவேன்! இப்ப நாங்க இந்தியாவுக்கு வந்தது எதுக்குன்னு நினைக்கிறே? ப்ரியாவோட கல்யாணத்தை பேசி முடிச்சு, கையோட நிச்சயதார்த்தமும் பண்ணிட்டுப் போகலாம்னுதான்!" என்றாள்.

ரகு தலைகுனிந்தபடி சிரித்தான்.

"சரி... அப்ப நான் கிளம்பறேன். ஆபீஸ்க்கு நேரமாய்டுச்சி! "என்று விடைபெற்று சென்ற ரகுவின் கார் தரையில் ஓடவில்லை. ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது.

'ப்ரியா இதோ உன் அம்மா அப்பா வந்துவிட்டார்கள். நம் திருமண நிச்சயதார்த்தமும் நடக்கப்போகிறது. இப்போது நீ என் வழிக்கு வந்து தான் ஆகவேண்டும். இப்போதாவது, 'ரகு ஐ லவ் யூ' என்று சொல்கிறாயா பார்ப்போம்!' ரகு பலதையும் யோசித்தபடி காரை



### ஹைக்கூ

அவளின் மௌன
உதட்டுக்குள்
உறைந்து கிடக்குமோ!
என்னோடு பேசத்துடிக்கும்
சொற்கள்!

-ஆர்.சி.முத்துக்கண்ணு.

நன்றி!
'நாங்கள்

ஓட்டினான்.

புருஷோத்தமன் மரியாதை நிமித்தம் அன்று ஃபாக்டரி செல்லாமல் வீட்டிலேயே இருந்தார். வேணுவும் அவரும் பல விஷயங்களைப்பற்றிப் பேசினர்.

அன்று மாலை!

ஹாலில் அனைவரும் குழுமியிருந்தனர். ரகுவும் ப்ரியாவும் கூட அமர்ந்திருந்தனர்.

"மச்சான்... உங்ககிட்டே ஒரு பொறுப்பை ஒப்படைக்கப்போகிறேன். எனக்கு உதவுறீங்களா?" என்று கேட்டார் வேணு.

"இப்படி கேக்கறதே தப்பு! செய்யுன்னு சொல்லு செய்யறேன். என்ன ஹெல்ப்?" என்று கேட்டார் புருஷோத்தமன்.

"இந்த ஊர்லேயே ஒரு நல்ல அலையன்ஸ் நம்ம ப்ரியாவுக்கு வந்திருக்கு. பேரு ஆதவன். கோடீஸ்வரர் புஷ்பலிங்கத்தோட ஒரே பிள்ளை! எந்த கெட்ட பழக்கமும் இல்லையாம். போட்டோவிலே பார்த்தேன். பையன் அம்சமாயிருக்கான். ப்ரியாவுக்குப் பிடிச்சிருக்காம். என்ன இருந்தாலும் முழுக்க விசாரிக்காம இந்த விஷயத்திலே இறங்க எனக்கு பிடிக்கவே இல்லை. இஃப் யூ டோன்ட் மைண்ட்... இந்தப் பையனை பத்தி விசாரிச்சு சொல்ல முடியுமா?" என்றபடி ஒரு அழகான வாலிபனின் போட்டோவைத் தந்தார் வேணு!

அவர் சொன்னதைக் கேட்டு அகிலாவுக்கும், ரகுவிற்கும் மட்டுமல்ல, புருஷோத்தமனுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. என்றாலும் அடுத்த கணமே சுதாரித்துக் கொண்டார்.

"கொடுங்க... இது என் கடமையில்லையா? சீக்கரமே விசாரிக்க சொல்றேன்" என்று போட்டோவை வாங்கிக் கொண்டார்.

அகிலா வாயடைத்துப் போனாள். என்ன பேசுவதென்றேப் புரியவில்லை அவளுக்கு.

ரகுவின் நிலைதான் மோசமாயிருந்தது. அதள பாதாளத்தில் குப்புற விழுந்துக் கொண்டிருப்பது போல் உணர்ந்தான். ப்ரியாவை நிமிர்ந்து பார்த்தான். எதையும் வெளிப்படுத்தாத முகம்.

'இங்கே என்ன நடக்கிறது? ப்ரியாவின் மனதில் என்ன இருக்கிறது? அவள் மனதில் நானில்லையா?இல்லாமலா சினிமா தியேட்டரில் மறைந்திருந்து என்னைப் பார்த்தாள்? ஒருவேளை நான்தான் தவறு செய்து விட்டேனோ? வேண்டுமென்றே அவளை கடுப்படிக்க நான் காவ்யாவிடம் நெருக்கமாக பழகியதை சீரியஸாக எடுத்துக் கொண்டாளோ? காவ்யாவை நான் காதலிப்பதாக தப்பர்த்தம் பண்ணிக் கொண்டாளோ? சே... நான் ஒரு மடையன். விளையாட்டாய் வினையை ஏற்படுத்தி கொண்டு விட்டேன். ப்ரியா வலிய வந்து என் மீதுள்ள காதலை சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டு அவள் மனதை புண்படும்படி நடந்துக் கொண்டு விட்டேன்



எந்தளவு வேதனைப்படுத்தியிருந்தால் வேறொருவனை மணக்க சம்மதித்திருப்பாள்? சே... முட்டாள்தனமாக நடந்துக் கொண்டேனே! இனியும் தாமதிக்க கூடாது. என் ப்ரியா எனக்கு மட்டும் தான் சொந்தம். உடனடியாக இந்த திருமண ஏற்பாட்டை நிறுத்தியாக வேண்டும். அதற்கு முன் ப்ரியாவிடம் என் காதலை அவள் மீது நான் கொண்டுள்ள அளவற்ற நேசத்தை வெளிப்படுத்த வேண்டும்!'

அதற்கு பின் அங்கு மற்றவர்கள் பேசிக் கொண்டிருந்த எதுவும் அவன் காதில் விழவில்லை. ப்ரியாவிடம் தனியே பேச சந்தர்ப்பம் எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

***

இரவு!

தன்னறையில் புத்தகத்தை பிரித்து வைத்திருந்த காவ்யாவின் சிந்தனை அதில் பதியவில்லை. எண்ணமெல்லாம் ரகுவின் மீதே இருந்தது. தியேட்டரில் அவன் பற்றிய தன் கையை தன் கன்னத்தில் பதிய வைத்து சிலிர்த்துப்போனாள். ப்ரியாவின் பெற்றோர் அவளை வேறொரு வரனுக்கு திருமண நிச்சயம் பண்ண வந்திருப்பது குறித்து அளவற்ற சந்தோஷம் அடைந்தாள்.

மேஜை மேலிருந்த பேனாவை எடுத்து அங்கிருந்த பேப்பர் நெடுகிலும் "ரகு ஐ லவ் யூ!" என்று ஸ்ரீராமஜெயம் போல் எழுதினாள்.

ரகு... ப்ரியாவைத் தேடி அவள் அறைக்குச் சென்றான். அங்கில்லாமல் போகவே... மொட்டைமாடியில்தான் இருக்கக்கூடும் என்று யூகித்து மாடிப்படியேறினான். காவ்யாவின் அறையிலிருந்து பார்த்தால் மாடிப்படி தெள்ளத் தெளிவாக தெரியும். ரகு காவ்யாவின் பார்வையிலிருந்து தப்பவில்லை.

'அவன் மொட்டை மாடிக்குச் செல்கிறான். அவனிடம், மனம் விட்டு பேச இது ஒரு வாய்ப்பு! பேசினால் என்ன? தீர்மானித்த காவ்யா... சிறிது நேர இடைவெளிக்குப் பின் அவளும் மொட்டை மாடிக்கு சென்றாள்.

அவள் சென்ற சில நொடிகளில் அலுவலகம் சம்பந்தமான சந்தேகம் ஒன்றை நிவர்த்தி செய்து கொள்வதற்காக காவ்யாவைத் தேடி உள்ளே வந்த புருஷோத்தமனின் கண்களில் மேஜை மீது படபடத்த பேப்பர் பட்டது. அருகில் சென்று பார்த்தவர் ஸ்தம்பித்துப் போனார்.

'கடவுளே... இந்தப் பெண்ணின் மனதில் இப்படியொரு ஆசையா? ரகு சம்மதித்தாலும் அகிலா சம்மதிப்பாளா?' கவலை ரேகை முகத்தில் படர்ந்தது.

***

மொட்டை மாடிக்கு வந்த காவ்யா அதிர்ச்சியின் உச்சத்திற்கேப்

போனாள்.

காரணம்- அங்கு ப்ரியாவின் அருகே ரகு இருந்தது தான்!

"ப்ரியா.. உன் மனசுல நீ என்ன தான் நினைச்சிட்டிருக்கே?"

"அதைப்பத்தி உங்களுக்கேன் கவலை?"

"கவலைப்படுவதால்தான் கேட்கிறேன். நெஞ்சில் கை வைத்து சொல்! இந்த திருமணத்திற்கு மனப்பூர்வமாக சம்மதிக்கிறாயா?"

"விருப்பப்பட்டோ, விருப்பமில்லாமலோ- எப்படியோ, யாரையோ கல்யாணம் செய்துக்கொண்டு தொலைந்து போகிறேன். அதைப்பற்றி உங்களுக்குகென்ன?"

"இப்படியெல்லாம் பேசாதே ப்ரியா! என் நெஞ்சே வெடித்து விடும் போலிருக்கிறது. வெட்கத்தை விட்டு; என் ஈகோவை கொன்றுவிட்டு சொல்கிறேன். எனக்கு நீ வேண்டும் ப்ரியா.. நீயில்லாத வாழ்க்கை என்று தனியாக எனக்கு எதுவுமில்லை!"

"நடிக்காதீர்கள். என்னிடம் ஒருநாளாவது அன்பாய் பேசியிருப்பீர்களா? அந்த காவ்யாவிடம் தானே கொஞ்சிக் கொண்டிருந்தீர்கள். போங்கள்... அவளையே கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாயிருங்கள்!" குரல் தழுதழுத்தது ப்ரியாவிற்கு.

துடித்துப் போய் விட்டான் ரகு!

"ஸாரி ப்ரியா-உன்னை நான் கஷ்டப்படுத்திவிட்டேன். உன்னை டீஸ் பண்ண வேண்டுமென்பதற்காகத்தான் அப்படி செய்தேன். மலேஷியாவிலிருந்து நீ போன் பண்ணும்போதெல்லாம் என்னிடம் பேசமாட்டாயா என்று எத்தனை முறை தவித்திருக்கிறேன் தெரியுமா?"

"எனக்கு பேச வெட்கமாயிருந்தது!"

"ஆனால், எனக்கு அந்த செய்கை கோபத்தைத் தந்தது. அதனால்தான் உன்னை சீண்டிப் பார்க்க.. காவ்யாவிடம் நெருங்கிப் பழகுவதுப்போல் நடித்தேனே தவிர, அவள் மீது இம்மியளவும் எனக்கு காதல் இல்லை. என் இதயம் உன்னிடம் இருக்கும் போது.. வேறு எந்தப் பெண் மீதாவது நேசம் வருமா? சொல் ப்ரியா!"

"அப்ப....?"

"ஐ..லவ் யூ!" என்று கைகளை விரித்தான் ரகு. அதற்கு மேல் தாங்க மாட்டாமல் அந்த கைகளுக்குள் தன்னை சிறைப்படுத்திக் கொண்டாள் ப்ரியா. 'ஐ லவ் யூ ரகு!', என்று அவள் உதடு முணு முணுத்துக் கொண்டிருக்க.. காதலோடு அதை தன் உதடால் சிறைபடுத்தினான் ரகு!

தலையை சுற்றியது காவ்யாவிற்கு.

'பொளேர்' என்று யாரோ அடித்ததுப்போல் வலித்தது. கண்கள் கரகரவென சுரந்தன. ஓசையெழுப்பாமல், அந்த காதலர்களை சங்கடப்படுத்தாமல் கண்ணீரோடு படியிறங்கினாள் காவ்யா.





12

அந்த பங்களா கல்யாணகளை கட்டியிருந்தது. அகிலாவுக்கும் ப்ரியாவிற்கும் தாங்கள் நினைத்ததை சாதித்துவிட்ட திருப்தியோடு வலம் வந்தனர். வேணுவும் விசாலட்சியும் இந்தியா வந்தது ஆதவன் என்கிற வரனுக்காக அல்ல. அத்தனையும் செட்டப்! ஆதவனின் போட்டோவை வைத்துக் கொண்டு சென்னையில் மட்டுமல்ல- இந்தியா முழுக்கவே அலைந்தாலும் கிடைக்கமாட்டான். ஏனென்றால் அப்படியொரு நபர் இங்கே இருந்தால் தானே? அந்த போட்டோவில் இருக்கும் நபர் மலேஷியாவில் இருக்கும் ப்ரியாவின் நண்பன் டோனிதான்.

ப்ரியாவின் பெற்றோருக்கும் தங்கள் மகளை ரகுவைத் தவிர வேறு யாருக்கும் மணமுடிக்க விருப்பமில்லை. அகிலாவும், ப்ரியாவும் தங்கள் திட்டத்தை அழகாக நாடகமாடியும் விட்டார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி ரகுவும் வலையில் விழுந்துவிட்டான். இந்த நாடக விஷயம் புருஷோத்தமனுக்கு இன்றுவரைத் தெரியாது.

ரகு இப்போதெல்லாம் ப்ரியாவை விட்டு இப்படி அப்படி நகர்வதில்லை. அலுவலகத்திற்கும் சரிவர செல்வதில்லை. ப்ரியா கோபித்துக் கொள்வாள் என்று காவ்யாவிடமும் பேசுவதில்லை.

காவ்யா துடித்துப் போய் விட்டாள். அவமானமாக உணர்ந்தாள்.

அவன் ப்ரியாவை காதலிக்க.. ஊடலுக்கு என்னை அல்லவா ஒரு கருவியாய் பயன்படுத்திக் கொண்டான்? என் மனதையல்லவா காயப்படுத்தி விட்டான்? அவளை சிரிக்க வைக்க என்னை அழவைத்து விட்டானே? என்னை வெறும் மண் பொம்மை என்றா நினைத்து விட்டான்? பொங்கி பொங்கி அழுதாள் காவ்யா.

ஒரு பெண்ணுக்கு இதைவிட பெரிதாய் வேறு அவமானம் வந்து விடப் போவதில்லை. என் மீதும் தவறிருக்கிறது. குடும்பத்தை காப்பாற்ற வேண்டி பிழைக்க வந்த இடத்தில் எப்படி வரும் காதலும் கத்தரிக்காயும். ரகு மாமன் மகனாயிருந்தாலும் கூட அவனிடம் கைநீட்டி சம்பளம் வாங்கும் வேலைக்காரி.. முதலாளி மீது ஆசைப்படலாமா? சுகபோகத்திற்கு என் மனசு அடிமைப்பட்டு விட்டது போலும். நேற்றைய வாழ்க்கையை அடியோடு மறந்து போனதால் வந்த அடி இது! நான் யார் என்கிற தெளிவில்லாமல் போனதால் ஏற்பட்ட அவமானம். ரகுவை குறை சொல்லி என்ன பயன்? காவ்யாவின் கண்கள் ஓய்வின்றி சுரந்துக் கொண்டேயிருந்தன.

புருஷோத்தமன் அவளை கவனிக்கத் தவறவில்லை. மனம் நொந்துப்

போனவர். அந்த பங்களாவில் அவளைப் பற்றிய விஷயம் அறிந்தவர் அவர் மட்டும் தானே? எல்லார் எதிரிலும் சிரித்தபடி வளையவந்து யாருமறியாமல் கண்களை துடைத்துக் கொள்ளும் அவளுக்காக அவரும் அழுதார்.

அவருக்கு அந்தஸ்து பேதத்தில் நம்பிக்கையில்லை. திருமணம் என்பது இரு மனங்கள் சங்கமிக்கும் சமுதாய சடங்கு. தன் மகன் ரகுவின் மனம் கோணாதபடி முழுக்க அவன் விருப்பப்படி திருமணம் நடக்க வேண்டும் என்று ஆசைபட்டார். ரகு காவ்யாவை மணக்க விருப்பப்பட்டிருந்தாலும் திருப்தியுடன் சம்மதித்திருப்பார். அவன் ப்ரியாவை விரும்புகிறான் என்று தெரிந்த பிறகு அந்த விருப்பத்திற்க தடைபோட முடியுமா என்ன?

பாவம் இந்த பெண்! தாமாக கற்பனை செய்து, காதலை வளர்த்துக் கொண்டு இன்று துடிக்கிறாள். அப்பாவை இழந்த துக்கம் ஆறுமுன்... இந்த ஏமாற்றம் வேறு! இந்தப் பெண்ணின் குடும்பத்திற்கும் இவள் எதிர்காலத்திற்கும் எதையாவது செய்தாக வேண்டும் இனி இவள் இங்கிருந்தால் நொந்து நூலாகிப் போவாள். புனிதவதியிடம் கலந்தாலோசித்து இதற்கொரு முடிவு எடுத்தாக வேண்டும்.

அதன்படி யாருக்கும் சந்தேகம் வராமல் விசாரித்தார். சங்கர் இவள் மீது பைத்தியமாய் இருப்பதறிந்து நிம்மதியடைந்தார். அவனை விட நல்ல துணை வேறு யார் இருக்க முடியும்? ஆகையால் ரகுவின் திருமணத்திற்கு புனிதவதியின் குடும்பத்தையும், சங்கரின் குடும்பத்தையும் அழைக்க முடிவு செய்தார். முன்னதாக, காவ்யாவிற்கும், அவள் தங்கைகளுக்கும், புனிதவதிக்குமாக தனித்தனியாக ஒரு பெரும் தொகையை அவர்கள் எதிர்கால வாழ்விற்காக பேங்கில் போட்டு வைத்தார்.

வேணுவும் விசாலட்சியும் தங்கள் மலேஷிய பயணத்தை ஒத்திப் போட்டு விட்டனர். அவர்கள் நாடு திரும்புமுன் ரகு—ப்ரியா திருமணத்தை நடத்தி விட வேண்டும் என்று ஆசைபட்டனர்.

அடுத்த வாரமே திருமணம் என்று முடிவு செய்யப்பட்டு ஏற்பாடுகளும் நடந்துக் கொண்டிருந்தன.

ப்ரியா காவ்யாவை பார்த்த பார்வையில் ஏளனம் மிகுந்திருந்தது.

"காவ்யா...ப்ரியா ஜூஸ் கேட்டா! இதைக் கொண்டுப்போய் கொடு!" என்று ஜூஸ் நிரம்பிய டம்ளரை நீட்டினாள் அகிலா.

மறுபேச்சு பேசாமல் வாங்கிக் கொண்டு ப்ரியாவின் அறைநோக்கிச் சென்றாள்.

அறைக்கதவு திறந்தே இருந்தது. எனினும் கதவை மரியாதைக்குத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள். உள்ளே ரகுவும் இருந்தான். சட்டென பிரிந்தமர்ந்தனர்.



இதயம் இறுகிப்போக கிளாஸை நீட்டினாள் காவ்யா!

கரடியாய் நுழைந்த அவளை முறைத்துப் பார்த்தபடி டம்ளரை வாங்கியவள் கைதவறி கீழே போட்டு விட்டாள். அவள் உடையெல்லாம் ஜூஸ் சிதறி... ச்சலீர் என் ஓசையெழுப்பி உடைந்து சிதறியது.

அடுத்த கணம் பளாரென அவளை அறைந்தாள் ப்ரியா.

"மனசில எதையோ வச்சுக்கிட்டு என்னைப் பழி வாங்கறியா? என்னோட புது டிரஸ்... நாசம் பண்ணிட்டியே!" கோபத்தில் கத்தினாள்.

"பார்த்து தரக்கூடாதா காவ்யா?" என்றான் ரகு அதிர்வுடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் காவ்யா. 'ஏன் அடித்தாய் என்று அவளை ஒரு வார்த்தைக் கேட்கவில்லை. அந்தளவிற்கா மனசாட்சியில்லாமல் போய்விட்டது? அப்படிப்பட்ட உங்களுக்காகவா என் கண்ணீரை வீணாக்கிக் கொண்டிருக்கிறேன்?' அவனைப்பார்க்கவேப் பிடிக்கவில்லை.

ப்ரியா அடித்தது 'கூட' வலிக்கவில்லை: அவன் கேட்ட வார்த்தைதான் அடி நெஞ்சு வரை கசந்தது.

கல்யாண மண்டபத்தில் இங்கு மங்குமாக ஓடியாடி வேலைகளை கவனித்துக் கொண்டிருந்த் காவ்யாவின் முகத்தில் அவள் மனதினைப் போலவே ஒரு தெளிவு வந்திருந்தது.

திருமணத்திற்கு அவளின் அம்மாவும் தங்கைகளும், சங்கரும் வந்திருந்தனர்.

அவர்களை வெகுநாள் கழித்துப் பார்த்ததில் நெக்குருகிப்போனாள்.

'என் மீது நிஜமான பாசமும் நேசமும் கொண்ட உறவினர்கள் இவர்கள் தான்! என் கண்களில் தூசு விழுந்தால் கண்ணீர் விடக்கூடிய நிஜமான ஆத்மாக்கள் இவர்கள் தான்! இனி ஒரு கணமும் இவர்களை விட்டு பிரிந்திருக்கக்கூடாது!' முடிவு செய்துக் கொண்டாள்.

தாம்பூலப் பைகளை தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு அவசர அவசரமாய் படியிறங்கி வந்தவள் சேலை தடுக்கி விழப்போனவளை... எதிரில் வந்துக் கொண்டிருந்த அர்த்தத்திற்கும்தான் எவ்வளவு வித்தியாசம்? இந்த வித்தியாசம் உணராமல் இவன் மனதை எப்படியெய்லாம் வேதனைப்படுத்தி விட்டேன்?

என் சுகதுக்கத்தில் பங்கெடுத்துக் கொண்ட இவனின் அன்பை உதாசீனப்படுத்தினேன். தன் சுகத்திற்காக என்னை விளையாட்டுப் பொருளாக்கி வேதனைப்படுத்திய வனை நெஞ்சுக்குள் சுமந்து பெரும் பாவம் செய்து விட்டேன்!" காவ்யா வின் கண்கள் கலங்க ஆரம்பித்தது.

"என்ன காவ்யா?" என்றான் பதற்றமாய்.

"ஓ.. ஒண்ணுமில்லே மாமா!" என்றாள் சிரித்தபடி.

"சரி.. பார்த்துப்போ!" என்று நகர்ந்தான்.

"மாமா!" என்றாள்.

நின்றான் சங்கர்.

"என்ன 'பேசுவது காவ்யாதானா? போதும்.. இதுபோதும்! என் காவ்யா எனக்கு கிடைத்து விடுவாள்!'

"என்ன மாமா?"

"நிச்சயமாக.. காவ்யா! கண்டிப்பாக வாங்கித் தர்றேன். நீ நம்ம ஊருக்கு திரும்பி வரப்போறதை நினைக்கறப்ப.. ரொம்ப..ரொம்ப சந்தோஷமாயிருக்கு!"

அவன் முகம் மகிழ்ச்சியில் விகசிப்பதைப் பார்த்து காவ்யா ஆனந்தப்பட்டாள்.

சற்று தூரத்தில் இருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த புருஷோத்தமன் நிம்மதியாய் பெருமூச்சு விட்டார்.